பக்கங்கள்: 21 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விழயல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 20 ஞாயிற்றுக்கிழமை 05.09.2021 கதிர் 304

### இனி இது ரகசியம் அல்ல!

இன்றும் ஒன்பது நாள்களில் ஜெனிவாவில் ஆரம்பமாகும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன் ஸில் கூட்டத்துக்கு தமிழ்க் கட்சிகள் சார்பில் இனிமேல் ஓர் அறிக்கை அனுப்புவதில் அர்த்தமில்லை என்று நேற்று இப்பத்தியில் குறிப் பிட்டிருந்தேன்.

பக்கம்02



## ஜெனிவா விவகாரத்தை ஒட்டி

# பிளவுபட்டது கூட்டமைப்பு

### தமிழரசை விட்டு ரெலோ, புளொட் தனிவழி
### விக்கி, சுரேஷ், ஸ்ரீகாந்தாவுடன் கைகோர்ப்பு

கொழும்பு, செப்ரெம்பர் 05

ஜெனிவாவில் ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலுக்குத் தமிழர்களின் நிலைப் பாட்டை வெளிப்படுத்தும் விவகாரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான இலங்கை தமிழரசுக் கட்சியை அம்போ என்று ஓரங்கட்டி விட்டு, வெளியில் நிற்கும் பிற கட்சிகளுடன் காதும் காதும் வைத்தாற்போல கைகோர்த்து, புதிய கூட்டமைப்புக்கு காய் நகர்த்தியிருக்கும் ரெலோ மற்றும் புளொட்டின் நடவடிக்கையால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிளவுபட்டு இருப் பதாக தெரிவிக்கப்படுகின்றது.

2

## 3,333 பேருக்கு நேற்று தொற்று

இலங்கையில் மேலும் 3 ஆயிரத்து 333 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந் திர சில்வா தெரிவித்துள்ளார்.

21

## 145 பேர் மரணம்

இலங்கையில் மேலும் 145 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் 145 பேர் மரணமடைந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் இவ்வாறு உயி ரிழந்தவர்களில் 68 பெண்களும்,

21

## இந்திய மீனவர்கள் மீது வாள் வெட்டு,கொள்ளை



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,செப்.05

இந்தியாவின் கோடியாக்கரை மீன வர் கள் மீது இலங்கை மீனவர்கள் வாள் வெட்டுத் தாக்குதல் நடத்திப்பொருள் கொள்ளையில் ஈடுபட்டனர்

21

## வவுனியாவில் நேற்று நான்கு பேர் உயிரிழப்பு

### தடுப்பூசி பெறாதவர்களே சாவு

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் தடுப்பூசியைப் பெற் றுக்கொள்ளாத நான்கு பேர் கொரோனாத் தொற்று காரணமாக நேற்று

21

## 'சன்சைன் சுத்தா'வுக்கு கொரோனா

மாத்தறை, வெலிகம கொடவில பிர தேசத்தில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட 'சன்சைன் சுத்தா' என அழைக்கப்படும் பாதாள உலகக் குழு

2

## யாழில் நேற்று ஐவர் மரணம்!

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மேலும் 5 பேர் கொரோனாத் தொற்றால் நேற்று உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனையில் சிகிச்சை பெற்ற

2

## தமிழரசு தவிர்ந்த தமிழ்க் கட்சிகள் ஐ.நா. ஆணையாளருக்கு அறிக்கை

இலங்கைத் தமிழரசுக் கட்சியைத் தவிர்ந்த ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒருமித்து ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளருக்கு அறிக்கை ஒன்று அனுப்பியுள்ளனர்.

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஜனநாய மக்கள் விடுதலை

2



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழ்த் தேசியக் கட்சிகளை ஒன்றித்துச் செயற்படுவதற்கான ஒழுங்குமுறை – கடந்த தடவை போல – இம்முறை இல்லை என்றும் குறிப்பிட்டிருந்தேன்.

எனினும், இலங்கைத் தமிழரசுக் கட்சியைத் தவிர்த்து ஏனையவற்றை ஒன்றித்துச் செயற்படுத்தும் தந்திரத்தை ரெலோவின் செல்வம் – சுரேன் இணை கனகச்சிதமாக முன்னெடுத்து ஒப்பேற்றியிருக்கின்றது. நல்ல சாணக்கியம் தான்.

ஆனால், விதையின் பெறுபேறு விளைச்சலில்தானே தெரியும். சுரேன் குருசாமியைச் சேர்த்துக் கொண்டு செல்வம் ஆரம்பித்திருக்கும் இந்தக் குயுக்தித்தனம் தமிழினத்துக்கு நன்மையா என்பதற்குக் காலம்தான் பதில் சொல்லும்.

ஆனாலும், கூட்டமைப்புக்கு ஆப்பு வைத்ததில் இந்த முயற்சியில் நீதியரசர் சி.வீ.விக்ஸ்வரன், சுரேஷ் பிறேமச்சந்திரன், ஸ்ரீகாந்தா ஆகியோருக்கு முதல் 'ரவுண்ட்' வெற்றிதான். அதற்கு மேல் வெற்றி தொடருமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

கூட்டமைப்பை உடைத்த ரெலோவும் புளொட்டும் அடுத்த ரவுண்டில் நின்று பிடிக்குமா என்பதை விரைவில் நாம் அறியலாம்.

ஆனால், ஒன்று, எல்லா விடயத்துக்கும் செல்வத்துக்கும் சித்தார்த்தனுக்கும் வளைந்து போகும் மாவை சேனாதிராசாவின் நிலைப்பாட்டை தமிழரசுக்குள் இந்த இருவரும் பலவீனப்படுத்தி விட்டார்கள் என்பதுதான் உண்மை. இனியும் ரெலோவுக்கும் புளொட்டுக்கும் தாராள இடம் கொடுத்து, அவர்கள் இழுத்த இழுப்புக்கெல்லாம் மாவை சேனாதிராசா ஆட முடியாது என்ற அழுத்தம் தமிழரசுககுள் பீறிட்டு எழும். ரெலோ, புளொட்டுக்கு அதிக விட்டுக்கொடுப்புகளைச் செய்யக் கூடாது என்று சீறும் சிறிதரன் போன்றோரின் கை தமிழரசுக்குள் இயல்பாகவே ஓங்கும்.

தமிழரசை எகத்தாளமாகப் புறமொதுக்கி, தனி நடைபோட முயலும் ரெலோ, புளொட் குறித்து தெளிவான ஒரு நிலைப்பாடு எடுக்காமல் இனியும் மாவை சேனாதிராசா ஐக்கியம், ஒற்றுமை என்று தத்துவம் பேசிக் கொண்டு மடங்கிப் போவாரானால் கட்சிக்குள் அவருக்கு சாத்துப்படி நடந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இதற்குள் ஒரு விடயம். யார்,எந்தக் கட்சி என்ற விடயத்தைப் பிறகு கூறுகிறேன். இப்படித் தனி வழிபோக முயலும் 'தத்துவாதிகள்', 'அறிவுஜீவிகள்' ஜெனிவா விடயத்தை ஒட்டிப் புதுத் தத்துவம் ஒன்றையும் அவிழ்த்து விட்டிருக்கின்றார்கள் – ஜெனிவாவில் இலங்கை விடயம் தொடர்பான அடிப்படை சரித்திரம் கூடத் தெரியாமல்.

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு இலங்கை யுத்தமும் அதையொட்டிய விடயங்களும் எப்போது, எப்படி வந்தன?

இலங்கையின் இறுதி யுத்தத்தின்போது நடந்த விடயங்களை ஆராய ஐ.நா. செயலாளர் நாயகம் ஒரு விசேட நிபுணர் குழுவை நியமித்தார். அந்தக்குழு அது பற்றி விசாரித்தது. ஐ.நா. செயலாளர் நாயகத்துக்கு ஒரு பரிந்துரையை முன்வைத்தது.

இலங்கையின் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் யுத்தக் குற்றங்கள் இழைக்கப்பட்டன, மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் அரங்கேறின, அடிப்படை உரிமைகள் மீறப்பட்டன என்றெல்லாம் அந்த தருஸ்மன் குழு என்ற நிபுணர் அணி குறிப்பிட்டது.

அந்த அறிக்கையை ஐ.நா. செயலாளர் நாயகம் ஜெனிவாவில் இயங்கும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு அனுப்பி உரிய நடவடிக்கை எடுக்கும்படி வழிகட்டினார். அதிலிருந்துதான் எல்லாம் ஆரம்பித்தன.

இப்போது ஜெனிவாவில் இலங்கை தொடர்பான சகல விடயங்களுக்கும் அந்த அறிக்கைதான் மூலவேர்.

கடந்த ஜெனிவா அமர்வுக்கு முன்னர், அது தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் உட்பட தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் கிளிநொச்சியில் கூடி ஆராய்ந்த போதும் கூட இந்த அறிக்கையின் அடிப்படையிலேயே ஒரு முடிவுக்கு வந்தனர்.

அந்த அறிக்கையின் படி பொறுப்புக் கூறலை நிலைநாட்டுவதற்கு ஜெனிவா மனித உரிமைகள் கவுன்ஸிலினால் முடியாவிட்டால், அதைச் செய்ய முடியாமல் இருக்கின்றது என்று தெரிவித்து அதனை ஐ.நா. செயலாளர் நாயகத்துக்குத் திருப்பி அனுப்புங்கள், நாங்கள் ஐ.நா. மன்றத்திடம் இந்த அறிக்கையின் அடிப்படையில் பொறுப்புக் கூறல் குறித்து பேசிக் கொள்கின்றோம என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரைக் கோர முடிவு செய்யப்பட்டது.

ஆக, அந்த தருஸ்மன் அறிக்கைதான் எல்லாக் காய் நகர்த்தல்களுக்கும் அடிப்படை. இப்போது அதனையே நிராகரிக்க வேண்டும் என்ற பேச்சை ரெலோ தலைவர் செல்வம் உட்பட பல 'ஞானபண்டிதர்கள்' ஆரம்பித்திருக்கின்றார்கள் எனத் தகவல் வெளியாகியிருக்கின்றது.

ஏன் நிராகரிக்கக் கோருகின்றார்களாம்? அந்த அறிக்கையில், இலங்கை யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் அரசுப் படைகளாலும், விடுதலைப் புலிகளாலும் யுத்தக் குற்றங்கள் இழைக்கப்பட்டிருந்தன எனக் கூறப்பட்டுள்ளதாம். புலிகளாலும் யுத்தக் குற்றங்கள் இழைக்கப்பட்டிருந்தன என்று கூறப்பட்டிருப்பதால் அதை நிராகரிக்க வேண்டும் என்று விளக்கம் கூறப்படுகின்றது.

முழுத் தமிழ்த் தேசியத்தில் நிற்கும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் சுமந்திரன் போன்றோருக்கு விளங்காத 'மகா தத்துவம்' இவர்களுக்கு விளங்கியிருக்கின்றது. அதனால்தான் தருஸ்மன் அறிக்கையை புறமொதுக்கி ஐ.நாவை நடவடிக்கை எடுக்கக் கோருகின்றனர் இந்தப் பிரகிருதிகள்.

நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் போன்றோருடன் சேர்ந்து பத்திரிகைகளுக்கு அறிக்கை அஸ்திரத்தை விடுவதற்கு இப்படி நல்ல கூட்டுகள் சேருகின்றன போலும்.

தெரியாமலா அந்தப் பெரிய மனுஷன் – தந்தை – நேரத்துடனேயே கூறி வைத்து விட்டுச் சென்றான் – தமிழினத்தை கடவுள் தான் காப்பாற்ற வேண்டும் – என்று.

பாவம் தமிழினம். இவர்களை எல்லாம் தலைவர்களாக்கியதற்கு அது அனுபவித்துத்தான் தீரவேண்டும்.

– மின்னல் –

## 'சன்சைன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உறுப்பினர் ஹெட்டிஹேவகே அமில பிரசன்னவுக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவர், நேற்றுமுன்தினம் மதியம், கொடவில, வரகாபிடிய பாடசாலை வீதியில், காரில் பயணித்தபோது, இனந் தெரியாத நபர் ஒருவரால் சுட்டுப் படு கொலை செய்யப்பட்டிருந்தார்.

31 வயதுடைய சன்சைன் சுத்தா, மாத்தறை மிரிஸ்ஸ பிரதேசத்தைச் சேர்ந்த பிரபல போதைப்பொருள் வர்த்தகர் ஆவார்.

எவ்வாறாயினும், அவரின் சடலம் மீது நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில், சன்சைன் சுத்தாவைக் கொலைசெய்யப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் வாகனம், மாத்தறை பிரதேசத்தில் கைவிடப்பட்ட நிலையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

## பிளவுபட்டது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழரசைக் கைவிட்டு வெளியில் நிற்கும் பிற கட்சிகளுடன் சேர்ந்து வேறு வழி போக புளொட்டும், ரெலோவும் தயாராகிவிட்டன என்பதற்கான கட்டியமாக இந்த அதிரடி நடவடிக்கை கருதப்படுகின்றது.

தமிழ்க் கூட்டமைப்பில் வழக்கமாக இத்தகைய விடயங்களை சம்பந்தனின் வழிகாட்டலில் சுமந்திரனே முன்னெடுப்பார். இம்முறை இருவருக்கும் தெரியாமல் காய் நகர்த்தி, அதிரடியாக வேலையைக் கொண்டு சென்று ஒப்பேத்தியிருக்கின்றன புளொட்டும் ரெலோவும்.

இரு வாரங்களுக்கு முன்னர் இணையம் மூலம் நடைபெற்ற கலந்துரையாடலில் மேற்படி ஜெனீவா விடயத்தை ஒட்டி அனுப்புவதற்காக அறிக்கை ஒன்றைத் தயார் செய்யும்படி சம்பந்தன் தம்மை வழிப்படுத்தி இருக்கின்றார் என்றும், அக்கடிதம் தயாரானதும் எல்லா எம்.பிக்களிடமும், கூட்டமைப்பு கட்சிகளிடமும் ஒப்பம் பெற்று அதனை ஜெனிவாவுக்கு அனுப்பலாம் என்று சம்பந்தன் கூறியிருக்கின்றார் என்றும் சுமந்திரன் தகவல் வெளியிட்டிருந்தார். அந்தக் கடிதம் தயாரானதும் அதனை எல்லா கட்சிகளுக்கும் அனுப்புவார் என அந்தக் கூட்டத்தில் சுமந்திரன் தெரிவித்தமையை ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், நீதியரசர் விக்னேஸ்வரன், சட்டத்தரணி சிறிகாந்தா உட்பட எல்லோரும் செவிமடுத்து ஏற்றுக்கொண்டனர். ஆனால் அதை விடுத்துத் தாங்கள் தனியாக அறிக்கை ஒன்றை அனுப்பத் தயாராகின்றார்கள் என்ற தகவல் குறித்து அந்தக் கூட்டத்தில் அவர்கள் மூச்சே விடவில்லை.

நேற்று முன்தினம் திடுதிப்பென ரெலோ ஒருதனிக் கடிதத்தை ஏனைய பிற கட்சிகளுடன் சேர்ந்து தான் தயாரித்து வைத்திருப்பதாகவும், அதில் ஒப்பமிடுமாறும் தமிழரசு எம்.பிக்களுக்கு அனுப்பி வைத்தது. அதுபற்றி தமிழரசுக்கட்சி கூடி ஆராய முன்னரே அந்தக் கடிதம் மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு அனுப்பி வைக்கப்பட்டு விட்டது எனக் கூறப்பட்டது.

அந்தக் கடிதத்தில் ரெலோ, புளொட் தலைவர்கள், அவர்களின் எம்.பிக்கள், தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் நீதியரசர் விக்னேஸ்வரன் எம்.பி., ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன், தமிழ்த் தேசிய கட்சி தலைவர் சட்டத்தரணி ஸ்ரீகாந்தா ஆகியோர் ஒப்பமிட்டு இருக்கின்றனர். தமிழரசு எந்த முடிவும் எடுக்க முன்னரே, தம் பாட்டில் கடிதத்தை எழுதி, தமிழரசின் முடிவுக்குக் காத்திராமல், பிற கட்சிகளோடு சேர்ந்து ஜெனிவாவுக்கு அனுப்பி வைத்திருக்கின்றன ரெலோவும் புளொட்டும்.

இதேசமயம் சம்பந்தனின் வழிகாட்டலில் சுமந்திரன் தயாரித்த கடிதத்தின் பிரதி எல்லா கட்சிகளுக்கும் அனுப்பப்பட்டு இருக்கின்றன என்றும் தெரிகின்றது. ஆக, இனித் தமிழரசுக் கட்சி தான் தயாரித்த கடிதத்தை அனுப்புமானால் ஜெனிவாவுக்கு தமிழரசின் தனிக் கடிதமும் –

நீதியரசர் விக்னேஸ்வரன், சுரேஷ் பிறேமச்சந்திரன், ஸ்ரீகாந்தா ஆகியோரின் கட்சிகளோடு சேர்ந்து புளொட்டும்,ரெலோவும் தனியான கடிதமும் அனுப்பிய நிலைமை உருவாகும்.

தமிழர் அரசியல் வானில், தமிழ்க் கூட்டமைப்பு பிளவுபட்டு, புதிய கூட்டுக்கள் உருவாவதற்கான கட்டியமாக இந்த நடவடிக்கை கருதப்படுகின்றது.

ரெலோவின் சார்பில் அதன் தலைவர் செல்வம் அடைக்கலநாதனும், அதன் பேச்சாளர் சுரேன் குருசாமியும் சேர்ந்து இந்த தந்திரோபாய நடவடிக்கையை சாணக்கியமாக கட்டவிழ்த்திருக்கிறார்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

தனி வழி போகும் ரெலோ, புளொட்டின் அதிரடி நிலைப்பாடு குறித்து தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு விரைவில் மெய்நிகர் முறைமையில் கூடி தீர்மானங்களை எடுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## தமிழரசு தவிர்ந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன்னணியின் தலைவர் த.சித்தார்த்தன், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ஸ்ரீகாந்தா மற்றும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகம் கோவிந்தன் கருணாகரம் எம்.பி. மற்றும் எஸ்.வினோநோகராதலிங்கம் எம்.பி. ஆகியோரின் கையொப்பத்துடன் விரிவான அறிக்கை ஒன்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட 46/1 தீர்மானத்துக்குப் பின்னராக தமிழர் தாயகத்தில் இலங்கை அரசால் முன்னெடுக்கப்படும் தமிழினத்துக்கு எதிரான விடயங்களான காணி அபகரிப்பு, தொல்லியல் சார்ந்த நடவடிக்கைகள், நினைவேந்தல்களுக்கான தடைகள், பயங்கரவாதத் தடைத் சட்டத்தின் அடிப்படையிலான கைதுகள், சட்ட நடவடிக்கைகள், தடுத்து வைத்தல், காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகங்களில் இராணுவ அதிகாரிகளை நியமித்தல், காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேட வேண்டிய அவசியம் இல்லை என்ற அரசினுடைய நிலைப்பாடு, பொத்துவில் இருந்து பொலிகண்டி வரையிலான மக்கள் பேரெழுச்சிப் பயணத்தின் பின்னர் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் விசாரணைகள், கைதுகள், அண்மையில் அரசால் அறிவிக்கப்பட்ட அவசரகாலச் சட்டத்தால் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அபாய நிலைகள் போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## யாழில் நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வேலணையைச் சேர்ந்த 80 வயதுடைய பெண் ஒருவரும், நீர்வேலியைச் சேர்ந்த 56 வயதுடைய பெண் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட கீரிமலையைச் சேர்ந்த 78 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 99 வயதுடைய பெண் ஒருவர் மந்திகை ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்தார் என்று மருத்துவச் சான்றிதழ் வழங்கப்பட்டது. அவரது சடலத்தில் முன்னெடுக்கப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் கொரோனாத் தொற்றுள்ளமை கண்டறிப்பட்டது.

மந்திகை ஆதார மருத்துவமனை கொரோனா விடுதியில் சிகிச்சை பெற்ற பருத்தித்துறையைச் சேர்ந்த 77 வயதுடைய ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதன் மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனா நோயால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 276ஆக உயர்வடைந்துள்ளது.



# நிகழ்நிலை கற்பித்தல் செயற்பாடுகளுக்காகவே ஆசிரியர் மற்றும் அதிபர்களுக்கு 5 ஆயிரம் ரூபா!



## கல்வி அமைச்சர் தினேஷ் தெரிவிப்பு

நிகழ்நிலை கற்பித்தலுக்கான செலவுகளை ஈடு செய்யும் நோக்கிலேயே ஆசிரியர், அதிபர்களுக்கு இரண்டு மாதங்களுக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்க அமைச்சரவை தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை இலங்கையின் கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஒன்றரை ஆண்டுகளாக அரசாங்கம் அவர்களுக்கான வேதனத்தை உரியவாறு வழங்கி வருகிறது.

இந்த நிலையில், தற்போது ஆசிரியர், அதிபர்களுக்கு நிகழ்நிலை கற்பித்தல் நடவடிக்கைகளுக்காக ஏற்பட்டுள்ள மேலதிக செலவுகளுக்காகவே இரண்டு மாதங்களுக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்க அமைச்சரவை அனுமதியளித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# விசா செல்லுபடி காலம் நீடிப்பு! வெளியாகியுள்ள விசேட அறிவிப்பு

நாட்டில் தற்போது தங்கியிருக்கும் வெளிநாட்டவர்களுக்கான சகல விதமான விசாக்களின் செல்லுபடியாகும் காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 7 ஆம் திகதியுடன் முடிவடையும் சகல விதமான விசாக்களின் செல்லுபடியாகும் காலம் ஒக்ரோபர் மாதம் 7 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. குடிவரவு, குடியகல்வு திணைக்களம் இதனை அறிவித்துள்ளது.

குறித்த காலத்துக்குப் பொருந்தும் விசா கட்டணம் மட்டுமே இந்த காலத்திற்குள் அறவிடப்படும். விசா காலாவதியாகும் மற்றும் அதிகப்படியான அபராதம் வசூலிப்பதில் இருந்து விலக்கு அளிக்கப்படும். கொவிட்-19 அச்சுறுத்தல் காரணமாக அலுவலகப் பணிகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளால் விசா நீடிப்பை பெற்றுக்கொள்வதில் எதிர்நோக்கும் இடர்பாடுகளுக்குத் தீர்வாக இவ்வாறு விசா செல்லுபடியாகும் காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
VACANCIES

University of Jaffna will entertain applications to reach us on or before **13th September 2021** from qualified Sri Lankan Nationals for the undermentioned **Temporary posts.**

**FACULTY OF ARTS**

•**Temporary Assistant Lecturer** in Archaeology/ Christian Civilization/ Drama & Theatre Arts/ Economics/ English Language Teaching/ Fine Arts/ Linguistics/ Geography/ History/ Home Economics/ Information and Communication Technology/ Philosophy/Psychology/ Planning/ Political Science/ Sociology/ Tamil/ Translation Studies
•**Temporary Assistant Lecturer** in Law
•**Temporary Demonstrator in** Media studies
•**Temporary Instructor in** Dance(Bharatham)/ Carnatic Music/ Miruthangam for the Department of Dance

**Minimum Requirements/Qualifications:**
1.A Degree with specialization in the relevant subject with First Class or Second Class (Upper Division) Honours;
**OR**
2.A Degree with specialization in the relevant subject with Second Class (Lower Division) Honours;
**OR**
3.(a) A Degree with specialization in the relevant subject without Honours or any other degree with at least Second Class Honours,
**and**
(b) a recognized postgraduate degree in the relevant subject

**SALARY AND OTHER BENEFITS**
•**Temp. Demonstrator/ Temp. Instructor** **Rs. 40, 920/- p.m (Fixed)**
•**Temporary Assistant Lecturer** **Rs. 49,860/- p.m (Fixed)**

In addition to the above salary, the allowances approved by University Grants Commission applicable to the posts will also be paid.

**•Application Form**
Applicants are requested to fill online application form given in the link below:
Application form: **https://forms.gle/fyPChZfhqc5aKQhf8**
Applicants are required to submit application form along with the scanned copy of the statement of degree and paid Bank Slip for the deposit of a sum of Rs.100/- credited to any branch of the People's Bank in favour of **University of Jaffna Collection Account Number: 970000090000387**of Bursar, University of Jaffna on or before the closing date.

**Submission of Applications will not be entertained in person**. Only short-listed applicants will be called for an interview.

**Registrar**

# மட்டக்களப்பில் மீனவர்களின் படகுக்கு தீ வைத்த விசமிகள்

## விசாரணை ஆரம்பம்



மட்டக்களப்பு - பெரிய உப்போடை, லேக் வீதியில் உள்ள களப்பு பகுதியில் மீனவரொருவரின் படகிற்கு தீ வைக்கப்பட்டுள்ளது.

சுமார் 6 லட்சம் ரூபா பெறுமதியான படகு, வலை என்பன தீயில் முற்றாக கருகியுள்ளன எனத் தெரியவருகிறது.

நேற்று சனிக்கிழமை அதிகாலை 4 மணியளவில் தொழிலுக்குச் செல்வதற்கு மீனவர்கள் வருகை தந்த போதே தீ வைக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் தெரியவந்துள்ளது. மட்டக்ளப்பு-நாவலடி சுவிஸ் கிராமத்தைச் சேர்ந்த மீனவர் ஒருவரின் படகே இவ்வாறு அடையாளம் தெரியாதவர்களால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

# மட்டு தலைமையக பொலிஸ் நிலையத்தில் இதுவரை 85 பேருக்கு கொவிட் தொற்று

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலையத்தில் 3 ஆவது கொவிட் அலையில் இதுவரை ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் உயிரிழந்துள்ளமையுடன், 85 பேருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டு அவர்கள் சிகிச்சையின் பின்னர் குணமடைந்து திரும்பியுள்ளனர் எனப் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தலைமையக பொலிஸ் நிலையத்தில் சுமார் 600 பொலிஸார் கடமையாற்றி வருகின்றனர். இந்த நிலையில் விடுமுறையில் சென்றுவரும் மற்றும் கடமையிலுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு தொடர்ந்து அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதில் இன்றுவரை 85 பேருக்கு தொற்று உறுதி கண்டறியப்பட்டு அவர்கள் சிகிச்சைக்காக தனிமைப்படுத்தப்பட்ட பின்னர் குணமடைந்து திரும்பியுள்ளனர்.

அதேவேளை; இங்கு கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன் ஒருவர் நீரிழிவு நோய்க்காக கொழும்பு பொலிஸ் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக சென்றபோது அவருக்கு கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இருந்தபோதும் விடுமுறைக்கு வீடுகளுக்குச் சென்று திரும்பும் பொலிஸ் உத்தியோகத்தர்களை தனிமைப்படுத்தி அவர்களைஅன்டிஜன்பரிசோதனையின் பின்னர் கடமையில் ஈடுபடுத்தி வருகின்றோம் என அவர் தெரிவித்தார்.

# தனிமைப்படுத்தல் மீறல் மேலும் 739 பேர் கைது

நாட்டில் நேற்று (சனிக்கிழமை) காலை 6 மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலங்களில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளைமீறிய குற்றச்சாட்டில் 739 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் ஊடகப் பிரிவு விடுத்துள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது 70 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளைமீறிய குற்றச்சாட்டில் இதுவரை கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 64 ஆயிரத்து 647 ஆக உயர்வடைந்துள்ளது.

அதேபோன்று மேல் மாகாணத்துக்கு உட்பிரவேசிக்கும் மற்றும் வெளியேறும் 13 இடங்களில் நேற்று 1,335 நபர்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் 1,959 வாகனங்களும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## முடிகிறது ஒற்றுமை நாடகம்

*“எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது. எது நடக்கின்றதோ அது நன்றாகவே நடக்கின்றது. எது நடக்கவிருக்கின்றதே அதுவும் நன்றாகவே நடக்கும்.”* – என்றான் கீதாசாரத்திலே பரந்தாமன்.

தமிழர் தேசியத் தரப்பிலும் அப்படி நம்பிக்கை கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

தமிழர் தரப்பில் நீண்டகாலம் எதிர்பார்த்த விடயம் இப்போது வெளிப்பட்டிருக்கின்றது.

தமிழ்க் கூட்டமைப்பு கொள்கை ரீதியில் பிளவுபட்டிருக்கின்றது என்பது தெளிவு.

செய்பவை எல்லாவற்றையும் செய்து விட்டு, நாம் இன்னும் ஒற்றுமையாகத்தான் இருக்கின்றோம், பிளவுபடவில்லை என்று தமிழர்கள் காதில் பூச்சுற்றுவதற்கு இன்று காலையிலேயே அறிக்கைத் தாள்களுடன் களத்துக்கு வருவார்கள் தமிழரசுத் தலைவர் மாவை சேனாதிராசாவும், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதனும், புளொட் தலைவர் சித்தார்த்தனும் என்பது நிச்சயம்.

அவலை நினைத்துக் கொண்டு உரலை இடித்த அத் தலைவர்களில் பலரின் செயற்பாடு இலங்கைத் தமிழரசுக் கட்சியினரைப் பொறுத்தவரை முதுகில் குத்திய விவகாரமாகவே பார்க்கப்படும்.

இவ்வளவு காலமும் ஜெனிவா மனித உரிமைகள் கவுன்ஸில் விவகாரத்தை தமிழர் தரப்பில், தமிழரசுத் தலைமையில், கூட்டமைப்பு ஒன்றுபட்டே அணுகி வந்திருந்தது.

ஆனால், இம்முறை தமிழரசுக்குத் தெரியாமலேயே செல்வமும் – அவரது மதியுரைஞரான சுரேந்திரன் குருசாமியும் – காய் நகர்த்தி, தமிழரசுக்கு நெற்றியடி கொடுத்திருக்கின்றார்கள் என்பது என்னவோ உண்மைதான்.

அது, அவர்கள் சுமந்திரன் – சம்பந்தன் இணைக்கு திட்டமிட்டு வைத்த ஆப்பு என்று எண்ணிக் கொண்டிருக்கலாம். ஆனால் புளொட், விக்னேஸ்வரனின் கட்சி, சுரேஷின் கட்சி, ஸ்ரீகாந்தாவின் கட்சி ஆகியவற்றுடன் கூட்டுச் சேர்ந்து தமிழரசுக்குக் காலை வாரிய செயல்தான் இது.

நிச்சயமாக இது, ரெலோ – புளொட் இரண்டும் ஏனைய கட்சிகளுடன் சேர்ந்து சுமந்திரன் – சம்பந்தன் இணைக்கு வைத்த ஆப்பாக தமிழரசுக் கட்சியின் ஏனையோரால் பார்க்கப்பட மாட்டாது. அதையும் தாண்டி ஒட்டு மொத்தத் தமிழரசுக்கும் வைத்த ஆப்பாகவே தமிழரசுக் கட்சியின் ஏனைய தலைவர்களும் – மாவை சேனாதிராசா, ஸ்ரீதரன், சீ.வி.கே.சிவஞானம், செல்வராசா, மருத்துவர் சத்தியலிங்கம், சார்ள்ஸ் நிர்மலநாதன், சாணக்கியன் போன்ற தலைவர்கள் எல்லாம் – நோக்குவர்.

அந்த வகையில் பார்த்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தங்களுக்குத் தானே ரெலோவும், புளொட்டும் குழிபறித்திருப்பதாகவே படுகின்றது.

ஜெனிவா மனித உரிமை கவுன்ஸில் அமர்வுக்கு அனுப்புவதற்கு கடிதம் ஒன்றைத் தயார் செய்யும்படி சம்பந்தன் ஐயா கூறியுள்ளார். அதன் பிரதியை தயார் செய்ததும் தருகிறேன் என்று கடைசியாக இணையம் மூலம் ஒன்று கூடிப் பேசிய போது சுமந்திரன் தெரிவித்திருந்தார்.

அப்போது அதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த ரெலோவின் செல்வமும், சுரேனும் நாங்கள் தனியாக ஒன்று தயாரிக்கிறோம், அனுப்பப் போகின்றோம் என்று தெரிவிக்காமல், அம்சடக்காக இருந்து விட்டு – இப்போது தமிழரசுக்கோ அதன் தலைவர்களுக்கோ – கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுக்கோ, கூட்டமைப்பு சார்பில் இவ்விடயங்களைக் கையாளும் சுமந்திரனுக்கோ – கடைசி நேரம் வரைத் தெரிவிக்காமல் தனிப்பட ஒரு கடிதத்தை புளொட்டுடன் சேர்ந்து தயாரித்து அனுப்பியிருக்கின்றார்கள்.

கடிதத்தை அனுப்புகின்றபோது விரும்பினால் அதில் ஒப்பமிடுங்கள் என்ற பாணியில் கடைசி நேரத்தில் கடிதத்தின் பிரதி தமிழரசு எம்.பிக்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. கூட்டமைப்பு தலைவர் சம்பந்தனுக்கு அனுப்பப்பட்டதா, அவரின் கருத்து உள்வாங்கப்பட்டதா என்பது கூடத் தெரியவில்லை.

தமிழ்க் கூட்டமைப்பிலிருந்து யாரையும் நாங்களாக வெளியேற்றக் கூடாது என்பதுதான் அதில் உள்ள கட்சித் தலை வர்களின் கூற்றுப் பேச்சும்.

இப்போது தாங்களாகவே ரெலோவும் புளொட்டும் தனி வழி புறப்பட்டு விட்டன. இதைப் புரிந்து கொண்டு சாமர்த்தியமாக நடந்தால் தமிழரசு தேறும். இனியும் வேறு ஏதேனும் கதைக்காக – கனவுக்காக – ஒற்றுமை, ஐக்கியம் என்று தாளம் போட்டால் தமிழரசின் கதி அதோ கதிதான் என்றாகும் என்பது நிச்சயம்.

# மாதம் ஒன்றுக்கு 10 ஆயிரம் பேர் கொவிட்டால் உயிரிழக்கும் அபாயம்!

## வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் எச்சரிக்கை

நாட்டில் தற்போது காணப்படும் கொரோனா அச்சுறுத்தல் நிலைமை தொடர்ந்து நீடித்தால் எதிர்வரும் நாள்களில் நாள் ஒன்றுக்கு 10 ஆயிரம் பேர் தொற்றாளர்களாக இனங்காணப்படும் அபாயம் உள்ளதோடு மாதமொன்றுக்கு 10 ஆயிரம் பேர் உயிரிழக்கும் அவல நிலை ஏற்படும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினரும் ஊடகக்குழு உறுப்பினருமான வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் எச்சரித்துள்ளார்.

நாட்டில் தற்போது பதிவாகும் கொரோனா மரண வீதமானது இந்தியாவை விட ஐந்து வீதத்தால் அதிகரித்துள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பெயரளவில் மாத்திரம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இந்த தனிமைப்படுத்தல் ஊரடங்கில் 90 சதவீதமான மக்கள் வீட்டுக்குள்ளே முடங்கி இருந்தால் மாத்திரமே கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த முடியும் எனவும் குறிப்பிட்டார்.

நாடு தற்போது எச்சரிக்கை நிலை நான்கில் உள்ளது. இது சிவப்பு எச்சரிக்கையையும் சமூகப் பரவலையும் குறிக்கின்றது. மேலும் தென்னாபிரிக்காவில் பரவும் சி12 எனப்படும் புதிய கொரோனா திரிவும் இலங்கையில் பரவும் அபாயம் உள்ளது எனவும் அவர் கூறினார்.

# இலங்கையின் தெந்கு கடலில் பயனித்த வெளிநாட்டு மீன்பிழப் படகில் ஹெரோயின்



இலங்கையின் தெற்கு கடற்பகுதியில் 7 பேருடன் பயணித்துக் கொண்டிருந்த வெளிநாட்டு மீன்பிடிப் படகு ஒன்றிலிருந்து பெருந்தொகையான ஹெரோயினை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இந்தப் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை கடற்படை பேச்சாளர் கப்டன் இந்திக டி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், குறித்த படகைக் கரைக்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ரிஷாத்துக்கு தொலைபேசி கொடுத்த சிறைக்காவலருக்கு இடமாற்றம் வழங்கல்

உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல்கள் தொடர்பிலான விசாரணைகளுக்கு என கைது செய்யப்பட்டு, விளக்கமறியல் உத்தரவின் கீழ், மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள, முன்னாள் அமைச்சரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனிடம் இருந்து சிறைச்சாலை அதிகாரிகள் கையடக்கத் தொலைபேசி ஒன்றினை மீட்டிருந்தனர்.

குறித்த தொலைபேசியை மகசின் சிறையில் சேவையாற்றிய சிறை பாதுகாவலர் ஒருவர் வழங்கியிருந்தமை விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகவும், அதனால் குறித்த சிறைக்காவலர் வவுனியா சிறைச்சாலைக்கு உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் என சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர், சிறைச்சாலைகள் ஆணையாளர் (நிர்வாகம்) சந்தன ஏக்கநாயக்க கூறினார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்–

மகசின் சிறைச்சாலையின் தலைமை சிறைக்காவலரும் மற்றொரு காவலரும், கடந்த முதலாம் திகதி இரவு வேளையில், ரிஷாத் பதியுதீன் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைச்சாலை அறையின் பக்கம் மேற்பார்வை பணிக்காக சென்றபோது, அவர் தொலைபேசியில் கதைப்பதை கண்டுள்ளனர் எனவும், பின்னர் அவர் அந்த தொலைபேசியை சிறை அறைக்கு வெளியே வீசிய நிலையில் அதனைக் கைப்பற்றினர் எனவும் அவர் தெரிவித்தார்.

தற்பொழுது மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழ்ப்பாணத்தில் ஊரடங்கு சட்டத்தை மீறி செயற்பட்டோருக்கு எதிராக நடவடிக்கை

யாழ்ப்பாணம்– கோப்பாய் பகுதிகளில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை மீறி வீதியில் பயணித்தோருக்கு எதிராக பொலிஸாரால் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கோப்பாய் பகுதிகளில் பணத்தடையை மீறி பொதுமக்கள் வீதிகளில் பயணிப்பதுடன், வீதிகளில் சுகாதார நடைமுறையைப் பின்பற்றாது, வியாபார நடவடிக்கையை முன்னெடுக்கின்றமையால் கொரோனாத் தொற்று பரவல் அதிகரிப்பதற்குரிய வாய்ப்பு அதிகம் காணப்படுவதாக பெரும்பாலானோரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே, அதனைத் தடுக்கும் முகமாக கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கோப்பாய் பொலிஸாரால் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, அத்தியாவசிய சேவை தவிர்ந்து வீதியில் பயணித்தோர் மற்றும் பயணத்தடை வேளையில் சுகாதார நடைமுறையைப் பின்பற்றாது வீதிகளில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டோரின் விவரங்கள் பொலிஸாரால் சேகரிக்கப்பட்டு, சட்ட நடவடிக்கைக்குட்படுத்தும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

## எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

அங்கம் - 66

ந.வித்தியாதரன்

ஓர் ஊடகவியலாளனின் – பத்திரிகையாளனின் – தகுதி, திறமை, சிறப்பு, ஆளுமை, பணி நயப்பு ஆகியவற்றை வெறுமனே அவனின் எழுத்தை காலங் கடந்து வாசிப்பதன் மூலம் சரிவரக் கணக்கிட்டு விட முடியாது என்பதுதான் என் கருத்து. அவன் வாழ்ந்த – பணியாற்றிய – சூழல், களம், ஊடகம், பொது நிலைமை போன்ற இன்னோரன்ன சூழமைவுகளின் அடிப்படையில்தான் அவனின் எழுத்துப் பணியை அளவிட வேண்டும். இதற்காக இரண்டு சம்பவங்களைக் குறிப்பிட விரும்புகிறேன்.

என் நினைவு சரியென்றால் 2006 ஜனவரி இரண்டாம் திகதி இது நடந்தது. திருகோணமலை நகரத்தில் கடற்கரையோரத்தில் ஒட்டி மாலையில் ஒன்றுகூடியிருந்த ஐந்து மாணவர்கள் – பல்கலைக்கழக அனுமதியை எதிர்பார்த்து இருந்தவர்கள் – சீருடை தரித்த அரசுத் தரப்பினரால் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டனர்.

யுத்தம் சூடு பிடித்திருந்த அந்தச் சமயத்தில் பௌத்த, சிங்களப் பேரினவாத அரசு தன்னுடைய அரச பயங்கரவாதத்தை மூடி மறைக்க வழமைபோல இவ்விடயத்தில் புலி சாயம் பூசியது. அந்த ஐவரும் புலிகள் என்றும், அவர்கள் படையினருக்கு எறிவதற்காக எடுத்து வந்திருந்த கிரனேட் வெடித்ததில் அனைவருமே கொல்லப்பட்டனர் என்றும், முன் இரவிலேயே அறிக்கை வெளியிட்டது பாதுகாப்பு அமைச்சு.

நான் என்னுடைய செய்தி மூலங்கள் வாயிலாக உண்மை விடயங்களை அறிந்து கொண்டேன். ஐந்து மாணவர்களின் காதுக்கு பக்கத்திலும் இயந்திரத் துப்பாக்கிகளை வைத்துச் சுட்டிருக்கின்றார்கள். மண்டை பிளந்து, மூளை வெளியேறிய நிலையில் ஐவரின் சடலங்களும் திருகோணமலையில் ஆஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கப்பட்டிருப்பதை அறிந்துகொண்டேன்.

திருகோணமலை நகரமே அந்த முன்னிரவில் பயங்கரத்தில் அடங்கி, அசாதாரண அமைதியில் மூழ்கிக் கிடந்தது. அந்தச் சமயத்தில் கொழும்பிலிருந்து நான் கொடுத்த அழுத்தம் காரணமாக எனது திருகோணமலை செய்தியாளர் நைஸாகத் திருகோணமலை ஆஸ்பத்திரிக்குச் சென்றார். நான் ஏற்பாடு செய்திருந்த ஒரு டாக்டர் மூலமாக ஆஸ்பத்திரி சவச்சாலைக்குள் நுழைந்து, அந்த ஐவரின் சடலங்கலையும் பல்வேறு கோணங்களில் படம் பிடித்து அனுப்பினார்.

அடுத்த நாள் காலையில் இலங்கையில் உள்ள அனைத்துத் தமிழ்,சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளும் பாதுகாப்பு அமைச்சின் அறிக்கையை அப்படியே செய்தியாக்கி வெளியிட்டன – ஐந்து புலிகள் திருகோணமலை நகரத்தில் கொல்லப்பட்டனர் என.




எனினும் நான் ஆசிரியராக இருந்த உதயனிலும், சுடர்ஒளியிலும் நான் துணிந்து ஒரு காரியம் செய்தேன். ‘திருகோணமலையில் ஐந்து அப்பாவி மாணவர்கள் சுட்டுக்கொலை, அவர்களை புலிப் பயங்கரவாதிகள் என்கிறது அரசு’ என்ற சாரப்பட நான் தலைப்பிட்டு செய்தி எழுதினேன்.

அடுத்த நாளும் அந்த ஐவரும் பயங்கரவாதிகள் என்று அரசு சாதித்தது. அதனால் நான் ஒரு காரியம் செய்தேன். இரண்டாம் நாள் கொழும்பில் சுடர் ஒளியிலும் யாழ்ப்பாணத்தில் உதயனிலும் முன்பக்கத்தில் சரி அரைவாசிக்கு மேற்படி ஐந்து மாணவர்களின் புகைப்படங்களை, ஒருபுறம் காது வழியாக சன்னம் துளைத்து, மறுபுறம் மண்டையோட்டைப் பிய்த்து மூளை வெளியேறி கிடக்கும் புகைப்படங்களை



– கோரக் காட்சியை – ‘புளோ அப்’ செய்து வர்ணத்தில் அச்சிட்டு வெளியிட்டேன். ‘இவர்கள்தான் தாங்கள் கையாண்ட கிரனேட் வெடித்துக் கொல்லப்பட்ட பயங்கரவாதிகள் என அரசு கூறும் ஐந்து அப்பாவி மாணவர்கள். அவர்களின் காதுகளுக்கு அருகில் ரைபிளை வைத்துச் சுட்டதில் தலை பிளந்து மூளை வெளியேறிக் கிடக்கும் இந்தக் காட்சி அவர்கள் எப்படிக் கொல்லப்பட்டன என்பதற்கு சாட்சியம்’ என்ற பட விளக்கத்துடன் பிரசுரித்தேன்.

கொழும்பே அதிர்ந்தது. அந்த மாணவர்கள் சூட்டுச் சம்பவம் இன்றும் ராஜபக்ஷ அரசுக்கு அதிர்வு தரும் பிரச்சினையாக நீடிப்பதற்கு அந்தப் படங்களே அடிப்படையாகின. ஆனால் அந்தப் படங்களைப் பிரசுரித்தமைக்காக அடுத்த இரு வார காலத்தில் நாங்கள் பெரும் விலை கொடுக்க வேண்டியதாயிற்று. அந்தப் படங்களைப் பிடித்தவர்கள் யார் என்பதை நான் செய்திகளில் குறிப்பிடவில்லை. எனினும் ஊகித்துக் கொண்ட சில தரப்புகள் அடுத்த இரண்டு வாரத்தில் எங்களின் திருகோணமலை செய்தியாளரான இளைஞர் சுகிர்தராஜனை அவரது வீட்டு வாசலில் வைத்துச் சுட்டுக் கொன்றன.

ஐந்து மாணவர்கள் படுகொலைச் செய்தியை மற்ற அனைத்து ஊடகங்களினின்றும் முற்றிலும் வேறுபட்டு, உதயன், சுடர்ஒளி பத்திரிகைகள் கையாண்டமையை, கொழும்புப் பல்கலைக்கழக ஊடகவியல் துறை மாணவன் ஒருவன் தனது பட்டப்படிப்புக்கான ஆய்வுக்குரிய விடயமாக எடுத்து, ஆய்வு நடத்தி, பட்டப்படிப்பை பூர்த்தி செய்தான் என்பதைப் பின்னர் அறிந்தேன்.

உணர்ச்சியூட்டும் அந்தப் படங்களைப் பிரசுரித்தமையை ஒட்டி அப்போதைய ஊடக அமைச்சர் அனுர பிரியதர்ஷனயாப்பா, பொலிஸ்மாஅதிபர் போன்றோருடன் ஊடக ஆசிரியர்களுக்கான சந்திப்பில் கடும் வார்த்தை பிரயோகங்கள் உடன் நான் மோத வேண்டியிருந்தது.

இது போல என் ஊடக வாழ்வில், அச்சுறுத்தலுக்கு மத்தியில் நாங்கள் துணிச்சலுடன் முடிவெடுத்த சம்பவங்கள் பலப்பல. விவரித்து எழுதின் தனி நூலாகவே ஆக்க முடியும்.

அதே நாங்கள் வேறு சில விடயங்களில் அம்சடக்காகவும் நடந்து கொண்டோம்.

உதாரணத்துக்கு தொண்ணூறுகளில் யாழ்குடாநாட்டிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட விடயம். இன்று, அது இனச் சுத்திகரிப்பா, இல்லையா என்று வெளியிலிருந்து விமர்சித்துக் கொண்டிருக்கிறோம். ஒருவரை ஒருவர் வைகிறோம்.

ஆனால் அன்று அந்த மக்களின் பலவந்த வெளியேற்றம் எப்படியான மன உளைச்சலை அவர்களுக்குத் தந்திருக்கும் என்பதை அதற்குப் பின்னர் அத்தகைய இடம்பெயர்வுகள் வெளியேற்றங்களை நேரடியாக அனுபவித்த எங்களுக்குத் தெரியும்.

இன்று மனித உரிமைகள் அது, இது என்றெல்லாம் அதிகம் பேசும் – துணித்து – எழுதும் எங்களின் கைகளில் அன்றும் எழுதுகோல்கள் இருந்தன. பத்திரிகையின் ஆசிரியர்களாகவும் தீர்மானிக்கும் பொறுப்பிலும் நாங்களே இருந்தோம். அந்தப் பலவந்த வெளியேற்றத்தை ஒரு செய்தியாக – இடப்பெயர்வாக அறிக்கையிட்டோம். அவ்வளவுதான். யாரும் எங்களைத் தேடி வந்து, அது தொடர்பில் எங்களுக்குக் கட்டுப்பாடு விதிக்கவில்லை; வழிகாட்டல் வழங்கவில்லை. ஆனால் அந்த விடயத்தில் நாங்களே எங்களுக்கான சுய தணிக்கையை செய்துகொண்டோம். குறைந்தபட்சம் அந்தக் கட்டாய வெளியேற்றத்திற்கு – இடப்பெயர்வுக்கு – உள்ளாக்கப்பட்ட முஸ்லிம் சகோதரர்களின் மன உளைச்சலை வெளிப்படுத்திப் பகிர்ந்து கொள்ளும் ஓர் ஆசிரியர் தலையங்கத்தை கூட எழுதினோம் என எனக்கு நினைவில்லை. சில சமயங்களில் அந்தக் கட்டாய வெளியேற்றத்தை நியாயப்படுத்தியும் ஆசிரியர் தலையங்கம் எழுதி இருப்போமோ என்னவோ, அதுவும் நினைவில் இல்லை. எதுவும் நினைவில் இல்லை.

அந்தப் பழைய பத்திரிகைகளின் பதிவுகளை தேடிப் பிடித்து பார்க்கும் நிலையிலும் நான் இல்லை. உதயன் அலுவலகத்திலோ அல்லது சுவடிகள் திணைக்களத்திலோ அந்தக்காலத்திற்குரிய பத்திரிகைப் பிரதிகள் இருக்கும். அவற்றைத் தேடிப் பிடித்துத் தூசிதட்டினால் தான் உண்மை வெளிவரும்.

அப்படி நான் பழைய சம்பவங்களைக் குறிப்பிடுவதற்கு, எங்களின் சாதனையைப் புகழ்வது அல்லது இயலாமையைத் தூற்றுவது நோக்கமல்ல.

ஓர் ஊடகவியலாளனை – பத்திரிகையாளனை – எடைபோடுவதற்கு வெறும் செய்திகளை, எழுத்துக்களை மட்டுமல்ல, அவை கட்டவிழ்ந்த காலச்சூழல், அந்தப் பேனாப் போராளி பணிபுரிந்த தளம், நிலைமை யாவற்றின் அடிப்படையில்தான் அவன் கணிக்கப்பட வேண்டும் என்பதை சுட்டுவதற்காகதான்.

கொழும்பில் முப்படைகள், பொலிஸ், அரசு, சட்டம், நிர்வாகம், பயங்கரவாதத் தடைச் சட்ட விதிகள் போன்ற கழுத்துக்கு குறுக்கிடும் ஆபத்துகள் இருந்த போதும், அவற்றையும் மீறி, திருகோணமலையில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட 5 மாணவர்கள் விடயத்தில் துணிந்து உண்மையை அம்பலப்படுத்த முடிந்த எங்களால் யாழ்ப்பாணத்தில் முஸ்லிம்கள் பூண்டோடு பலவந்தமாக வெளியேற்றப்பட்ட போது ஏதும் செய்ய முடியவில்லை என்பதை ஆய்வுக்கு உட்படுத்துவதன் மூலமே எங்களின் பங்கு, பணி, திறமைகளை நாம் எடைபோட முடியும்; எடை போட வேண்டும்.

இத்தகைய பின்புலத்தில்தான் ஊடக ஜாம்பவான் எஸ்.டி.எஸ்ஸின் சிறப்பையும் பங்கு, பணியையும், ஆளுமையையும் நீங்கள் கணிப்பிட வேண்டும். அதைச் சொல்வதற்கு தான் மேற்படி இரண்டு விடயங்களையும் என் அனுபவ உதாரணங்களில் நான் முன் வைத்தேன்.

சுதந்திரமாகவும், சுயாதீனமாகவும் என் மனதுக்கு சரி என்று பட்டதை நான் எழுதுவதற்கும் பிரசுரிப்பதற்கும் சுமார் முப்பது ஆண்டுகளுக்கு மேல் எனக்கிருந்த வாய்ப்பும் வசதியும், எஸ்.டி.சிவநாயகம் ஐயாவுக்கு இருக்கவே இல்லை.

இந்தப் புரிதலுடன்தான் அவரின் ஊடகப் பங்கு பணியை நாம் அளவீடு செய்ய வேண்டும். அதை நாளை விவரமாகப் பார்ப்போம்.

(வளரும் .....)


ஐந்து மாணவர்களின் இறுதி ஊர்வலம்



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங் காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 121

### 338. உங்கள் முயற்சிகள் தொடர்ந்தனவா?

ஒரு போர் நிறுத்தமோ அல்லது ஸ்ரீலங்கா இராணுவத்தைத் தவிர்த்து சரணாகதி என்பதோ, இந்தியாவின் தலை அசைப்பு இன்றி, நடக்கப்போவது சாத்தியமில்லை என்பதை நாங்கள் மிகத் தெட்டத் தெளிவாக மார்ச் 2009 இலேயே கணித்திருந்தோம்.

இவற்றை எடுத்துச் சொல்லியும் நாட்டில் ஒப்புதல் பெற்று செய்யலாம் என்று சொன்னவர்கள் அது தொடர்பில் ஏதும் முன்னெடுப்புகள் செய்தவர்களாகத் தெரியவில்லை. ஆகவே விடுதலைப் புலிகளின் அமைப்பாளர்களுக்கு விருப்பம் இருந்ததோ, இல்லையோ லண்டனில் தமிழர் தகவல் நடுவத்தின் இயக்குநர் வரதகுமாரை அணுகி (எங்கள் இருவருக்கும் 1979 ஆம் ஆண்டிலிருந்து இணைப்பு இருந்தது.) ஐரோப்பாவில் இருந்த எல்லாக் குழுக்களையும் இணைத்து அவர்களுக்கும் இருக்கும் தொடர்புகளில் இந்தியாவை அணுகுவதற்கு வழிதேடக் கோரினேன்.

நடுவத்தின் இயக்குநர் என்றளவில் வரதகுமாரின் தொடர்புகள் விடுதலைக் குழுமங்கள் எல்லாவற்றினோடும், சர்வதேச அமைப்புகள், ஐரோப்பிய அரசாங்க அதிகாரிகள் என்று பலவாறும், மதிப்புக்கு உரியதாகவும் இருந்தன. இந்த முயற்சியில் விடுதலைக் குழுக்கள் (ஐரோப்பியாவில் இயங்கியவை) தாங்கள் எல்லோரும், விடுதலைப் புலிகள் தாம்தான் ஏகோபித்த தலைவர்கள் என்ற தலைப்பாகையை விட்டு, திம்பு அடிப்படையில் அரசியல்தீர்வுக்குப் போக ஒத்து வருவார்களானால் தாங்கள் ஒவ்வொருவரும் தங்களின் இந்தியத் தொடர்புகளால் புதுடெல்லிக்கு அழுத்தம் தர ஒத்துக் கொண்டார்கள். கே.பி. மட்டத்தில் அவற்றிற்குப் பதில்கள் வரவில்லை. அவர் தனது தொடர்புகளால் போர் நிறுத்தத்துக்கு அல்லது சரணாகதி அடைபவர்கள் பிற நாட்டு இராணுவத்துக்கு முன் செய்வதாக முயற்சித்துக் கொண்டிருக்கிறார், அவை தவறும் பட்சத்தில் இவற்றைக் கவனிக்கலாம் எனச் செய்தி பரிமாறியவர்கள் அறிவித்தார்கள். இவற்றால் இந்தியாவுக்குச் சில அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன. அவற்றோடு, தமிழ்நாட்டில் எழுந்த உணர்வலைகளும், காங்கிரஸும், திமு.கவும் இணைந்துதான் இந்தப் போரை நடத்துகிறார்கள் என நாடாளுமன்றத் தேர்தலின் பிரச்சார மேடைகளில் ஜெயலலிதா தொடர்ந்து பேசியதும் தங்கள் வாக்குகளுக்குப் பாதிப்பு ஏற்படுத்துகிறது எனக் குறிப்பிட்ட காங்கிரஸ் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம், தமிழ்நாட்டிலிருந்த ஈழத்தமிழ் அகதிகளின் கோரிக்கையின் அடிப்படையில் ஒரு போர் நிறுத்த இணக்கத்துக்கான ஏற்பாடுகளுக்கு சோனியா காந்தியின் ஆதரவையும் பெற்று மேற்கொண்டார்.

எல்லா விடுதலை இயக்கங்களுடனும் இணைந்து விடுதலைப் புலிகள் அரசியல் தீர்வு ஒன்றுக்காகப் பேச்சுவார்த்தைகளுக்கு ஒத்துக்கொள்கிறார்கள் எனவும், தாங்கள் ஆயுதங்களைக் கைவிடத் தயாராக இருக்கிறார்கள் எனவும் ஒரு அறிக்கையைக் கொடுத்



தால் அதனைத் தொடர்ந்து போர் நிறுத்தம் பற்றி இந்தியா ஸ்ரீலங்காவுக்கு அழுத்தம் கொடுப்பது என்பது அந்த முஸ்தீபு.

இந்த முயற்சியை, பழ.நெடுமாறனும், வைகோவும் மற்றும் அவர்களது தமிழகத்தின் ஆதரவாளர்களும் ஏற்றுக் கொள்ளவில்லை. தேர்தல் முடிவுகள் வரைத் தாக்குப் பிடிக்கச் சொன்னார்கள். அதனால் அந்த முயற்சிகளும் கைகூடவில்லை. இடைக்காலங்களில் நாங்கள் அறிந்த வகையில், முல்லைத்தீவில் இருந்த விடுதலைப் புலிகளிடையே சரணடைந்து விடலாம் என நடேசன் தலைமையில் புலித்தேவன் மற்றும் பிள்ளைப் பாசங்களால் துடித்த இளம் போராளிகள் இருந்தனர். சிலர் கடைசிவரை போராடுவதுதான், தாம் பிடி பட விட மாட்டோம் என்று நின்றார்கள். பிரபாகரனோடு இன்னும் ஒரு பகுதி ஏதாவது வழியில் முற்றுகையைத் தகர்த்து, வன்னிப் பரப்பு போன்றவற்றுக்கு வெளியேறுவது என்ற திட்டங்களில் இருந்தனர். கே.பி. இவற்றுக்கு வியூகம் வகுத்தபின் ஸ்ரீலங்கா அரசுடன் பேசுவோம் என்றுவிட்டு மௌனமானார். ஆயினும் வேறு முயற்சிகளைத் தொடர்ந்தோம்.



வரதகுமாரதும் எங்களதும் முயற்சிகள் எல்லா மட்டங்களிலும் தொடர்ந்து அழுத்தங்களைப் பிரயோகித்தன. ஆயினும் கே.பி. தரப்பிலிருந்தும் விடுதலைப் புலிகளின் மற்ற ஆதரவாளர்களிடமிருந்தும் மக்களை மீட்பதற்காக அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள் மேலும் முயற்சிகள் எடுக்கும், அவை எல்லோரையும் பாதுகாக்கும் என்ற நிலைப்பாடே தொடர்ந்தது. என்னால் ஸ்ரீலங்காவின் வெளிவிவகார அமைச்சில் எங்களது தொடர்பாளராக இருந்தவருக்கு அனுப்பிய மின்அஞ்சலில் மீண்டும் புலம்பெயராளர்கள் போர் வலயத்துக்குச் சென்று விடுதலைப் புலிகளுடன் நேரடியாகப் பேசுவதற்கு அனுமதி தருமாறும் கேட்டிருந்தேன். 30 ஏப்ரல் 2009 இல் அனுப்பப்பட்ட அந்த அஞ்சலின் சாராம்சம் இதுதான்:-

மேலும் இன்று பேசியதின் பின் இதனை அனுப்புகிறேன். பேசியவை எல்லாவற்றையும் மீளச் சொல்லாது, முக்கியமானவையை உங்களது உடனடிக் கவனத்துக்காக அனுப்புகிறேன். மார்ச் 2009 கூட்டங்களுக்குப் பின் நாட்டிலிருந்து திரும்பியபின் நடப்பவை எல்லாவற்றையும் எங்களிடையே ஆராய்ந்து, விடுதலையின் உண்மையான காவலர்களிடம் இருந்து பலத்த அதிருப்தியும், அவமானங்களும் பெற்றாலும் அவர்களும் அவற்றை ஜீரணிக்கக் கூடிய வகையில் பகிர்ந்து கொள்வோம்.

பஞ்சம் படை வந்தாலும், பாரெல்லாம் வெந்தாலும் அஞ்சுவமோ நாங்களடி கிளியே, நல்லூர் கந்தன் தஞ்சமடி என்று யோகர் சுவாமிகள் பாடியது போல நாட்டில் கொடிய யுத்தம் இடம்பெற்ற காலங்களில் கூட எவ்வித அச்சமுமின்றி நல்லூரானைத் தஞ்சமென்றடைந்த அடியவர்களுக்கு அருள்பாலித்த முருகன், இம்முறை தன் பக்தர்களைக் காப்பதற்கென்றே தன்னுடைய திருவிழாவை எளிமையாக்கிக் கொண்டார் என்று அடியவர்கள் நம்புகிறார்கள்.



1964 இல் திருப்பணி கண்ட தற்போதுள்ள சித்திரத்தேரைத் தானும் வடம் பிடித்து இழுக்கும் கோவில் அறங்காவலர் சண்முகதாஸ மாப்பாண முதலியார்.

(17ஆம் பக்கம் பார்க்க)

# வடிவழகா வேலவனே வழிசமைப்பாய் எங்களுக்கு!

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா



காவடிகள் ஆடிவரும் கந்தனது சன்னதியில்
கரங்குவித்து அடியவர்கள் கந்தன்முகம் காணநிற்பார்
ஆறுமுகன் விதிவர ஆதவனும் வரவேற்பான்
அரோகரா எனுமொலியோ ஆகாயம் தொட்டுவிடும்

ஆதவனின் ஒளியணைக்க ஆறுமுகன் அருள்சுரந்து
அசைந்துவரும் தாமரையாய் அரன்மகனும் வந்திடுவார்
தேரடியில் திரண்டிடுவர் தரிசனத்தைக் காண்பதற்கு
ஆறுமுகன் தேரேற அழகுடனே வந்திடுவார்

ஊரெல்லாம் நல்லூரான் உவந்துவரும் தேர்காண
வெண்மணலில் விதைத்துவிட்ட நன்மணியாய் நிறைந்திருப்பார்
தேர்வடத்தைத் தொட்டுவிட்டால் செய்தவினை அகலுமென
தொட்டுவிட அடியார்கள் கிட்டக்கிட்டச் சென்றிடுவார்

தேரடியில் மலையாக தேங்காய்கள் குவிந்திருக்க
கூடிநிற்கும் அடியார்கள் குறையகற்ற உடைத்திடுவார்
சிதறிவிடும் தேங்காய்போல சிக்கலெலாம் ஆகவென
சிந்தையிலே அடியார்கள் செறிவாக நிறைத்திடுவார்

வீதிவரா பலவடியார் வீடிருந்து பார்ப்பதற்கு
நாடிருக்கும் தொலைக்காட்சி நற்றுணையாய் ஆகிவிடும்
வானொலிகள் வருணனை மனமிருத்த வந்துநிற்கும்
வடிவேலன் தேரசைந்து வண்ணமுற வீதிவரும்

வந்தகாட்சி மனமதிலே பதிந்துபோய் இருக்கிறது
இன்றுகாட்சி மாறுபட்டு வேறாகி நிற்கிறது
கந்தனது பெரியதேர் அசையாமல் இருக்கிறது
எந்தவித தளப்பமின்றி உள்ளேதேர் பவனிவரும்

காலமதைக் கருத்திருத்தி கந்தன்தேர் ஏறிடுவார்
கந்தனது அடியார்கள் கருத்திருத்தி உளம்நிறைவார்
விடுதலையை வேலவனார் விரைந்தெமக்கு தருகவென
அடிபரவி நிற்பதுவே அடியவர்க்குக் கதியாச்சு

தீராத வினையகற்ற செந்திருவாய் அமைந்தவனே
பேரிருளாய் ஆகிநிற்கும் பெருநோயை அழித்துவிடு
ஊர்முழுக்க ஓடிவந்து தேரிழுக்கும் காலமதை
உன்னருளால் ஆக்கிவிடு உமைபாலா சண்முகனே

திருப்புகழைப் பாடி தெருவீதி வரவேண்டும்
திருக்கூட்டம் தேரதனை சிறப்பாகச் சூழவேண்டும்
வடந்தொட்டு தேரிழுத்து வரவேண்டும் வீதியிலே
வடிவழகா வேலவனே வழிசமைப்பாய் எங்களுக்கு











# பொது அறிவு வாராந்தம் ஒரு பரீட்சை

இந்த கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் வீட்டில் மூழ்கிக் கிடக்கும் உங்களுக்கு அறிவைத் தூண்டும் ஒரு பொது அறிவுப் பரீட்சையை அறிமுகம் செய்கின்றோம்.
பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் இப்பகுதியில் பத்து பொதுஅறிவு வினாக்கள் இடம்பெறும். கேள்விக்குரிய உங்கள் பதில்கள் அடுத்துவரும் ஞாயிற்றுக்கிழமை பிரசுமாகும்.
சனிக்கிழமை காலை 8 மணிக்கு முதல் **Kalaikkathiredu@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் எங்களுக்கு உங்கள் விடைகளை அனுப்பி வையுங்கள்.
தொடரின் முடிவில் அதிக எண்ணிக்கையான தடவைகள் சரியான பதிலை அனுப்பியவர்களுக்கு தகுந்த பரிசில்கள் காத்திருக்கின்றன.
உங்கள் பதிலை அனுப்பும்போது உங்கள் பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம் ஆகிய வற்றை குறிப்பிடத்தவறாதீர்கள்.

**1. அமெரிக்காவில் அண்மையில் தாக்கிய புயல் யாது?**

**2. பரா ஒலிம்பிக்கில் இலங்கை சார்பாக தங்கம் வென்றவர் யார்?**

**3.நூறு ஆண்டுகள் முடிவில் கொண்டாடப்படும் விழா எது?**

**4. இலங்கையின் தேசபிதா எனப் போற்றப்படுபவர் யார்?**

**5. 10 தீக்குச்சிகளை வைத்து உருவாக்கக் கூடிய மிகப் பெரிய இரட்டை எண் எது?**

**6. 14cm விட்டமுடைய வட்டத்தின் சுற்றளவு யாது?**

**7. விஜய், விமல் இணைந்து நடித்த திரைப்படம் எது?**

**8. தற்போதைய இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் யார்?**

**9.இலங்கையில் உயரமான மலை எது?**

**10. இறுதியாக சிம்பாப்வே கிரிக்கெட் அணி எவ் அணிக்கெதிராக ரி20 தொடரை 4-1 எனக் கைப்பற்றியது?**

**பெயர் :-** ..........................................
**முகவரி :-** ..........................................
**தொலைபேசி இலக்கம்:-** ....................
**அடையாள அட்டை:-** ........................
**மின்னஞ்சல் முகவரி:-** .......................

## 29.08.2021ஆம் திகதி பிரசுரமான பொது அறிவு வினாக்களுக்கான விடைகள்

1. வரிக்குதிரை
2.இங்கிலாந்து
3. 50
4.ஹெகலிய ரம்புக்வெல
5. 10 ஆண்டுகள்
6. ஜப்பான்
7. அமெரிக்கா
8. ஆஸ்திரேலியா
9. எறும்பு
10. இங்கிலாந்து

## சரியான பதிலளித்தவர்கள் விவரம் -

| | | | |
|---|---|---|---|
| எஸ். துவாரகா | - | மட்டக்களப்பு | 07 |
| பி.ஸ்ருதி | - | மட்டக்களப்பு | 09 |
| எஸ்.சதுர்ஜினி | - | அல்வாய் | 10 |
| கே.ஸ்ரீதரன் | - | கொழும்பு | 07 |
| எஸ்.கருணாநிதி | - | யாழ்ப்பாணம் | 09 |
| கே.அனுஷன் | - | ஏழாலை | 10 |
| ஐ.கார்த்திகன் | - | யாழ்ப்பாணம் | 07 |
| ஜெ.வினோஜன் | - | குடத்தனை | 08 |

24



**வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசாமி கோவில் வருடாந்த உற்சவத்தையொட்டி 'காலைக்கதிர்' நடாத்தும்**

# மாபெரும் சைவ சமய அறிவுப் போட்டி - 2021

## போட்டி விதிகள்

1. இந்தப் போட்டியில் ஆர்வமுடைய அனைவரும் பங்குபற்ற முடியும்.
2. 13.08.2021 முதல் எதிர்வரும் 06.09.2021 வரை காலைக்கதிரில் தினமும் வெளியாகும் கேள்விகளுக்குச் சரியான விடைகளை இதே தாளில் எழுதி, கூப்பனிலுள்ள விவரங்களை நிரப்பி அனுப்புவதன் மூலம் போட்டியினுள் நுழையலாம்.
3. சரியான விடைகளை எழுதி அனுப்புவர்களில் இருந்து தினமும் குலுக்கல் முறை மூலம் அந்த நாளுக்குரிய வெற்றியாளர் தெரிவு செய்யப்படுவார். அத்துடன் முழு நாள்களிலும் சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று பேருக்கும் பணப் பரிசில்கள் உண்டு

**பரிசு விவரம் :**

**முழுப் போட்டிக்குமான முதலாம் இடம் - ரூபா 7,000.00**
**இரண்டாம் இடம் - ரூபா 5,000.00**
**மூன்றாம் இடம் - ரூபா 3,000.00**
**தினசரி வெற்றியாளர்கள் ஒவ்வொருவருக்கும் தலா - ரூபா 1,000.00**

4. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் அனுப்பலாம்.
5. பரிசுக்குரியவர்கள் எதிர்வரும் 12.09.2021 அன்று காலைக்கதிர் பத்திரிகை மூலம் அறிவிக்கப்படுவார்கள்.
6. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும்.

**1. நல்லூர் கந்தசுவாமி ஆலயத் தீர்த்தத் திருவிழாவின் திதி எது?**

.....................................................................

**2. ஆலிலையில் அமுது படைக்கப்படும் குமராலயம் எது?**

.....................................................................

**3. நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்கு அருகில் அமைந்துள்ள - நல்லூர் இராசதானி மன்னர்கள் போருக்குச் செல்ல முன் வழிபாடாற்றிச் செல்லும் அம்மன் ஆலயம் எது?**

.....................................................................

**4. நல்லூர்க் கந்தன் மீது இருபாலை சேனாதிராயக் கவிராயர் பாடிய நூல் ஒன்று தருக**

.....................................................................

**5. திருநல்லூர்த் திருப்பள்ளியெழுச்சி நல்லூர்க் கந்த சுவாமி ஆலயத்தில் எவ்வேளையில் பாடப்படுகிறது?**

.....................................................................

**சரியான பதில்கள், கூப்பன்களுடன் இணைக்கப்பட்டு தபால் மூலமாகவோ, நேரடியாகவோ கிடைக்கக் கூடியவாறு எதிர்வரும் 10.09.2021 இற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.**

**காலைக்கதிர் - பசுமை ஊடக இல்லம்**
**30, கல்லூரி வீதி,**
**யாழ்ப்பாணம்**

24

**பங்குபற்றுபவர்களின் விவரங்கள்:-**

1. முழுப் பெயர் : ------------------------------------------
2. பிறந்த திகதி : ------------------------------------------
3. கல்வி கற்கும் தரம் : ------------------------------------
4. பாடசாலை : ---------------------------------------------
5. முகவரி : -----------------------------------------------

.........................................
கையொப்பம்




# எங்களது வேல்முருகன் ஏறிநிற்கும் ஏற்றமிகு ரதம் ஓட வினைகள் ஓடும்!

கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்

உலகமெலாம் காக்கின்ற நல்லூர்க் கந்தன்
ஒப்பற்ற திருவிழவும் வந்தால் மக்கள்
நிலமதனை விண்ணாக்கி மகிழ்வர் தங்கள்
நினைவெல்லாம் கந்தனது அழகுக் காக்கி
பலபலவாய் விரதங்கள் பிடித்தே வாடிப்
பக்தியினால் நெஞ்செல்லாம் உருக நின்று
மலமறவே உயிர் வளர்த்து மாண்பு கொண்டு
மங்கலங்கள் கண்டேதான் மகிழ்ந்து நிற்பர்

வள்ளியொடு தெய்வானைத் தாய்மார் சூழ
வலம் வருவான் வேல் வடிவாய் கந்தன் தானும்
நல்லவர்கள் மனம் குளிர்ந்து நடுங்கி ஐயன்
நாடரிதாம் திருவுருவின் நலங்கள் கண்டு
தள்ளரிய பெருவரத்தைப் பெற்றாற்போல
தமக்குள்ளே மெய்யுருகித் தளர்ந்து நிற்பார்
வெல்லரிய வேல் வடிவாய் தோன்றும் வேலன்
விளங்கிடவே விண்ணவரும் பணிந்து நிற்பார்

மஞ்சத்தில் ஏறிடுவான் மற்றை நாளில்
மயில் அதனில் ஏறித்தான் வலமும் செய்வான்
நெஞ்சத்தை அள்ளுகிற குதிரை ஏழில்
நிமிர்வோடு நின்றேதான் அருளைப் பெய்வான்
வஞ்சத்தான் இராவணனை அழுத்தி நிற்கும்
வளமான கைலையதாம் ரதத்தில் ஏறி
விஞ்சத்தான் அழகினிலே இவனை ஒப்பார்
வேறெவரும் இல்லை என வியக்க வைப்பான்.

வான் எட்டும் சப்பறத்தில் முருகன் ஏற
வாய் பிளந்து அடியவர்கள் வணங்கி நிற்பர்
ஊன் கெட்டு உயிர் கெட்டு உணர்வும் கெட்டு
ஒன்றிடுவர் முருகனவன் அழகுதன்னில்
நான் கெட்டு உயிர் உருக நனையும் நெஞ்சால்
நல்லையிலே கந்தனவன் வடிவைக் காண்பார்
தேன் சொட்டும் மலர்க்கிடையில் முருகன் தோன்றும்
தெவிட்டாத அற்புதமாம் காட்சி என்னே!

மாம் பழத்துப் போட்டியிலே கந்தன் தானும்
மாண்பான வெற்றி பெற உலகைச் சுற்ற
தாம் அதனைத் தாய் தந்தை அவரைச் சுற்றி
தருக்கோடு தமையனுமே பெற்று நிற்க
ஏமமதால் துயர் கொண்டு அணிகள் நீக்கி
எம் முருகன் கொள்ளுகிற ஆண்டிக் கோலம்
மாம் பழத்துத் திருவிழவில் காண என்று
மகிழ்ந்தே தான் சிறுவர் குழாம் கூடி நிற்கும்

நல்லூரான் தேர் ஏறி வலங்கள் செய்யும்
நயப்பான காட்சியினை என்ன சொல்ல
உள்ளூரார் வெளியூரார் பலரும் கூடி
ஊரதனில் மண்ணதனை மறைத்து நிற்பார்
பல்லோரும் வடம் அதனைப் பிடிக்கத் தேரும்
பார் தவிர்த்து தலைகளிலே வருமாற் போல
எல்லோரும் முருகா! என்றோலம் இட்டு
இழுத்திடவே அசைந்து வரும் அழகு என்னே!

நீறு நிறை நெற்றியுடன் நிமிர்ந்து நீயும்
நினைவெல்லாம் உனதாக்கி நேராய் வந்து
வீறுடனே தேரேறும் காட்சி என்னே!
விண்ணவரும் அதைக்காண விரைவார் இங்கு
தேர் அதனில் நீ ஏற மணிகள் தாமும்
திக்கெட்டும் தம் நாவால் ஒலிகள் கூட்டும்
ஆர் அதனில் மயங்காதார் ஐய! உந்தன்
அழகினிற்கும் நிகருண்டோ? அருமையோனே!

சில்லுருள மணிகளெலாம் சிலுசிலிர்த்து
சேர்ந்தரற்றும், அடியரெலாம் சிரங்கள் கூப்பி
வெல்லுகிற வேல்முருகா! என்று உன்னை
விருப்புடனே விண்ணதிரப் போற்றி நிற்பார்
துள்ளுகிற இளையரெலாம் துடித்தே நின்று
துவழாது தேங்காய்கள் உடைக்க அங்கு
மல்லதுவும் விழைந்ததுவோ? என்றே மக்கள்
மருண்டிடவே தேரசைந்து மண்ணில் ஓடும்


மங்களத்து இசை முழங்கும் ஒருபால் நல்ல
மனமுருக்கும் பஜனைகளும் இனிதாய்க் கேட்கும்
தங்களது உருமாறித் தெய்வம் ஏற
தாண்டவமும் புரிவார்கள் சிலரும் அங்கே
வெங்கலத்து நாதமெனக் குழல்கள் ஊதி
விரைவதற்கு வழிகாட்டி நிற்பார் தொண்டர்
சங்கமதில் தமிழ் வளர்த்த முருகா! உந்தன்
சாற்றரிய தேர் உருள வினைகள் தீரும்

தங்கமென மின்னுகிற தேரில் ஏறி
தழலுருவாய் கந்தனவன் ஊஞ்சலாட
பங்கமெலாம் இனித்தொலையும் என்றே எண்ணி
பக்தரெலாம் கண் அருவி சோர நிற்பர்
பொங்குகிற பகை அனைத்தும் ஒழித்தே கந்தன்
பொசுக்கிடுவான் தீமைகளை என்னச் சொல்வர்
எங்களது வேல் முருகன் ஏறி நிற்கும்
ஏற்றமிகு ரதம் ஓட வினைகள் ஓடும்!

இச்சை தரும் தேர் அசைந்து இருக்கை சேர
எழில் மிகுந்த கந்தனவன் ஆடை மாற்றி
பச்சையதைச் சாற்றி வரும் அழகு என்னே!
பார்த்தவர்கள் கண் அசையாச் சிலைகள் ஆவர்
விச்சையெலாம் தூசாகி விழுந்து போகும்
வேலவனின் வெல்லுகிற அழகின் முன்னே
கச்சையொடு நின்றாலும் கவனம் ஈர்க்கும்
கந்தனையே அலங்கரித்தால் காணப்போமோ?

தீர்த்தமதில் நல்லூரான் திகழ்ந்தே வந்து
தேவியர்கள் உடன் இருக்க ஆடும் காட்சி
பார்த்தவர்கள் வினை அகற்றும் பாவம் போக்கும்
பற்றறுத்து உயிர் உயர வழிகள் செய்யும்
ஆர்த்தடியார் அக்காட்சி கண்டு தங்கள்
ஆசையெலாம் தீர்த்திடுவர் அவர்கள் நெஞ்சம்
வேர்த்துருகித் திருவிழவும் முடிந்ததென்று
விதிர்விதிர்க்கும் வேல் நினைந்து அமைதி கொள்ளும்

எல்லோரும் போற்றுகிற முருகா! உந்தன்
ஏற்றமிகு விழவெல்லாம் காணமாட்டா
உள்ளூர அழுகின்றோம் உடைந்து போனோம்
ஒப்பற்ற நல்லூரா! உன்னைக் கூட
பொல்லாத நோய் வந்து அடக்கப் போமோ?
பொன்றித்தான் சூரனையே அடக்கி வென்றோய்!
நல்லோர்கள் மனங்குளிர விரைவில் உந்தன்
நலம்மிகுந்த விழவினையே காணச் செய்வாய








# கேடுகளை அழித்து நாடு காக்க வா சண்முகா!





தேருக்கு ஆரோகணம் செய்யும் சண்முகரும், தேர் இருப்புக்கு வந்த பின்னர் பச்சை சார்த்தி அமரந்து அருள்பாலிக்கும் சண்முகரும்

**(13 ஆம் பக்கத் தொடர்ச்சி....)**

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் தமிழுக்கும் சைவத்திற்கும் அருந் தொண்டுகள் ஆற்றிய யாழ்ப்பாணத்து அரசர்களது நேரடிப் பரிபாலனத்தில் இருந்து வந்த முக்கிய வணக்கத் தலங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. அதன் வரலாறு பற்றிய பல்வேறு குறிப்புகள் நூல்களில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், அந்நியர் வருகையின் பின்னான சைவ சமய எழுச்சியின் முக்கியமானதொன்றாக நல்லூர் ஆலயத்தின் வியாபகம் குறிப்பிடப்படுகிறது. இவ்வாலயத்தின் வரலாறு பற்றி யாழ்ப்பாண வைபவமாலை பல குறிப்புகளைக் கொண்டிருக்கிறது எனப்படுகிறது. இது தவிர நல்லைக் கலிவெண்பா, நல்லை வெண்பா, நல்லையந்தாதி, நல்லைக் குறவஞ்சி, நல்லை கந்தசுவாமி விஞ்சதி, நல்லை வேலவருலா போன்ற நூல்களின் மூலம் நல்லைக்குமரனின் அருள் பரப்பப்படு கிறது.

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்துக்கென்று சில சிறப்பம்சங்களும், தனித்துவமான தன்மைகளும் உண்டு. நேரந்தவறாத ஆறு காலப் பூஜை, அடியவர்கள் அனைவரும் சமமாகப் பாவனை செய்யப்படும் வகையில் ஒரு ரூபா அர்ச்சனைச் சிட்டை என்பன நல்லூரானின் சிறப்பம்சங்கள்.

அதேபோலவே நல்லூர் ஆலயத்தில் தினமும் அதிகாலை வேளையில் இடம்பெறும் பள்ளியெழுச்சியும், மாலை வேளையில் இடம்பெறும் பள்ளியறைப் பூஜையும் நல்லூரின் தனித்துவமான மரபுகளில் ஒன்று.

ஒவ்வொரு நாளும் மாலையில் மூலஸ்தானத்தில் இருந்து முருகப் பெருமானை சிறிய மஞ்சம் ஒன்றில் எழுந்தருளச் செய்து அவரைப் பாடிப் பரவிய படி அழைத்துச் சென்று பள்ளியறையில் அமரச் செய்து திரு ஊஞ்சல் பாடி துயருற வைப்பதும், காலை யில் பள்ளியறை வாயிலில் நின்று திரு நல்லூருத் திருப்பள்ளியெழுச்சி பாடி, முருகப் பெருமானை சிறு மஞ்சத்தில் ஏற்றி அழைத்து வந்து மூலஸ்தானத்தில் எழுந்தருளச் செய்து அன்றைய நாளின் அபிடேக ஆராதனைகளை ஆரம்பிப்பதும் தனித்துவமான மரபு.

எல்லாவற்றுக்கும் மேலாக நல்லூரில் அமர்ந்து அருளாட்சி புரிகின்ற ஸ்ரீ சண்முகப் பெருமான், பழனி சந்நிதானத்தில் இருக்கின்ற தெண்டாயுதபாணி, வள்ளி, தேவசேனா சமேத முத்துக்குமாரசாமி, மூலவராக அமர்ந்து அருளுகின்ற வேலவர், காவற் கடவுளான வைரவப்பெருமான் மற்றும் நல்லூர்த் தேரடி என்பன மாண்பும் மகிமையும் மிக்க அம்சங்களாகும்.









# பேரிடர் காலத்தில் நம்மை நாமே பாதுகாப்பது நம் அனைவரினதுமே தலையாய கடமையாகும்

## திருகோணமலை ஆயர் நோயல் இம்மனுவேல் ஆண்டகை வடக்கு - கிழக்கு ஆயர்கள் மன்றத்தின் சார்பில் விளக்கம்

கலாநிதி
ரூபன் மரியாம்பிள்ளை அடிகள்,
(காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் ஆசிரியர்)

வடக்கு கிழக்கு ஆயர் மன்றக் கருவிற்கு மறைந்த யாழ் ஆயர் மேதகு கலாநிதி வ.தீயோகுப்பிள்ளை ஆண்டகை 1979ஆம் ஆண்டு வித்திட்ட பின்னர் அது பல தடைகளைத் தாண்டி, நிதானமாக நடந்து வந்துள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளாக இந்த வடக்கு – கிழக்கு ஆயர் மன்றம் வெளிப்படையாகச் செயற்படத் தொடங்கி நான்கு அறிக்கைகளை வெளியிட்டுள்ளது.

இவற்றில் முதலாவது அறிக்கை 18 மே 2021 செவ்வாய்க்கிழமை நினைவு கூரப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பற்றி வெளியானது.

இரண்டாவது அறிக்கை உலகில் கொரோனாத் தொற்று நோய் அகன்று போக 24 ஒக்ரோபர் 2020 சனிக்கிழமை தினத்தை செபநாளாகக் கடைப்பிடிப்பது பற்றி வெளியானது.

மூன்றாவது அறிக்கை கொரோனாத் தொற்றில் இருந்து விடுதலை பெறுவது பற்றியும் அமைந்திருந்தது.

நான்காவது அறிக்கை அனைத்து தமிழ் அரசியற் கைதிகளையும் விரைவில் விடுதலை செய்வது பற்றியதாக வெளிவரவுள்ளது.

காலைக்கதிரின் இவ்வாரக் கிறிஸ்தவ செய்தி இதழில் திருகோணமலை மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி கி. நோயல் இம்மனுவேல் ஆண்டகை வடக்கு, கிழக்கு ஆயர் மன்றம் சார்பாக நான்கு ஆயர்களின் ஒப்பத்துடன் அண்மையில் வெளியிட்ட மூன்றாவது அறிக்கையை நோக்குவோம்.

இவ் அறிக்கையானது கொவிட 19 பெருந்தொற்று காரணமாக நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையில் மக்கள் நம்பிக்கையிழந்து, நிலைகுலைந்து போகாமல், நம்பிக்கையின் கீற்றுக்களாக எதிர்த்துப் போராட வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சார்ந்த நான்கு ஆயர்களால் விடுக்கப்படும் சிறப்பு மடல் என்ற விசேட தலைப்புடன் வெளியாகியுள்ளது. அது இங்கு பிரசுரமாகின்றது.



திருகோணமலை மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி நோயல் இம்மானுவேல் ஆண்டகை



மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி இம்மனுவேல் பர்ணாண்டோ ஆண்டகை (2)



மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் மேதகு காலநிதி பொன்னையா யோசவ் ஆண்டகை



யாழ்ப்பாணம் மறை மாவட்ட ஆயர் மேதகு காலநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை

### ஒரே இறைவனின் பிள்ளைகள் என்கிற உணர்வோடு ஒருமித்துச் செயல்பட அழைக்கப்பட்டுள்ளோம்

கொவிட் - 19 பெருந்தொற்றானது டெல்டா பிறழ்வு என்று வீரியமடைந்து கோரத் தாண்டவமாடும் காலமிது. இது நமது நாட்டையும் இவ்வுலகையும் பலமாகப் பாதித்துள்ளது. இதனால் ஏற்படுகின்ற அசௌகரியங்களும் உயிர் இழப்புக்களும் பல்லாயிரமாகும். மறுபக்கத்தில் ஆழமாகச் சிந்தித்துப் பார்த்தால் இதனால் நாம் நன்மைகளும் அடையப் பெற்றுள்ளோம்.

கடந்த ஒன்றரை வருடங்களுக்கு மேலாக உலகெங்கும் மக்கள் கொத்துக் கொத்தாக தொற்றாளர்களாக இனங்காணப்பட்டும் தனிமைப்படுத்தப்பட்டும் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டும் இறுதியில் பல மில்லியன் கணக்கில் இறந்தும் உள்ளனர். இத்தகைய இக்கட்டான தருணத்தில் உலக மாந்தர் அனைவரும் இன, குல, சாதி, சமய, அரசியல் பேதங்களைக் கடந்து ஒரே இறைவனின் பிள்ளைகள் என்கிற உணர்வோடு ஒருமித்துச்செயல்பட அழைக்கப்பட்டுள்ளோம்.

### எஞ்சிய நாள்கள் குறித்த அச்சத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்

இன்று உலகளவில் தொழிற்துறைகள் முற்றாகவோ பாதியளவிலோ செயலிழந்துள்ளன. இதனால் மக்களின் வாழ்வாதாரம் பாதிப்படைந்துள்ளது. மாணவர்களின் சுமுகமான பாடசாலைக் கற்றல் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டதன் காரணமாக அவர்கள் மத்தியில் வெறுப்புணர்வு, பிடிப்பற்ற தன்மை, தனிமைப்படுத்தப்பட்ட சூழல் போன்ற உளவியல் தாக்கங்கள் தோன்றியுள்ளன. மறுபக்கத்தில் முதியோரும், நீண்டகால தொற்று நோயினால் பாதிக்கப்பட்டோரும் தனிமைப்படுத்தலின் காரணமாக தமது எஞ்சிய நாள்கள் குறித்த அச்சத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

### சுகாதார மருத்துவப் பணியாளர்களின் அர்ப்பணம் நிறைந்த பணி பாராட்டுதற்குரியது

இப்பெரும் போராட்டத்தின் மத்தியில் சுகாதார மருத்துவப் பணியாளர்களின் அர்ப்பணம் நிறைந்த பணி மிகுந்த பாராட்டுதற்குரியது. தங்களது இன்னுயிரையும் துச்சமென மதித்து மிகுந்த அர்ப்பணிப்புடனும், சேவை மனப்பாங்குடனும் மருத்துவத் துறையினரும் சுகாதாரத் துறையினரும் முன்நிலைப் பணியாளர்களும் துப்புரவுப் பணியாளர்களும் பெருந்தொற்றிற்கு எதிரான போராட்டத்தில் கரம் கோர்த்துள்ளமையானது நமக்கு புதிய நம்பிக்கையினைத் தருகின்றது. இவர்களுக்காக இடைவிடாது இறைவேண்டல் புரிவோம். எமது ஆதரவுக் கரத்தினை அவர்கள்பால் நீட்டுவோம்.

### நம்மை நாமே பாதுகாத்துக் கொள்வது நம் அனைவரினதும் கடமையாகும்

இக்காலத்தில் நம்மை நாமே பாதுகாத்துக் கொள்வது நம் அனைவரினதும் தலையாய கடமையாகும். அரசும் சுகாதார அதிகாரிகளும் எமக்கு எடுத்துரைக்கும் வரை நாம் காலந்தாழ்த்தாது அவதானத்துடனும் விழிப்புடனும் செயல்படுவோம். காலம் தாழ்த்தாது பரிந்துரைக்கப்படுகின்ற தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதுடன் அத்தியாவசியத் தொடர்பாடல்களில் சமூக இடைவெளியினைப் பேணுவோம். எப்போதும் முகக்கவசம் அணிவது, தொற்று நீக்கிகளைப் பயன்படுத்தியோ அல்லது கைகளுக்கு சவர்க்காரம் இட்டோ எம்மையே நாம் சுத்தமாக வைத்திருப்பது, தேவையற்ற வீணான ஒன்றுகூடல்களைத் தவிர்ப்பது போன்ற செயற்பாடுகளை கைக்கொள்ள வேண்டியது நம் அனைவரினதும் கடமையாகும்.

பொதுமுடக்கம் மற்றும் தொழில் வாய்ப்புக்கள் அற்ற சூழ்நிலைகளால் தேவையில் இருப்போருக்கு எமது தாராள உதவிகளை முனமுவந்து செய்வோம்.

தனித்தோ குழுவாகவோ தொடர்புகளை ஏற்படுத்தி ஆதரவின்றி இருக்கும் மக்களுக்கு உதவிடுவோம்.

### ஆன்மீகத்தை ஆழப்படுத்த ஏதுவான காலமிது

ஆலயங்களிலும் கோவில்களிலும் வழிபாடுகளில் ஈடுபட முடியாவிட்டாலும் ஆன்மீகத்தை ஆழப்படுத்த ஏதுவான காலமிது.

வழமைபோல ஆலயங்களிலும் கோவில்களிலும் ஒன்றுகூடி வழிபாடுகளில் ஈடுபட முடியாவிட்டாலும் தனித்தோ குடும்பமாகவோ எமது ஆன்மீகத்தை ஆழப்படுத்த ஏதுவான காலமிது என்பதனை மறவாதிருப்போம். தனித்திருக்கும் அல்லது தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் காலங்களில் இறைவேண்டல், தியானம் போன்ற ஆன்மீகச் செயற்பாடுகளின் வாயிலாக இறைவனோடு ஒன்றித்து எமது ஆன்மீக வாழ்வினைப் பலப்படுத்திக் கொள்வோம்.

பொருளாதார ரீதியில் துயருறும் ஏழை மற்றும் நாளாந்தத் தொழில் புரியும் மக்களையும் நீதிகேட்டுப் போராடும் பல்வேறுபட்ட தரப்பினரின் நியாயமான கோரிக்கைகளையும் கருத்திற்கொண்டு அரசானது மக்களின் நலன்களை முதன்மைப்படுத்தி, நாடு பெருந்தொற்றிலிருந்து விடுபடவும், நாட்டில் சமத்துவமும் சமாதானமும் நிலவவும், போராடும் மக்களின் அடிப்படைக் கோரிக்கைகள் பூர்த்தி செய்யப்படவும், காத்திரமான முடிவுகளை எடுத்து செயல்பட வேண்டுமென தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறோம்.

### நாமும் நம்பிக்கையோடு வாழ்ந்து அடுத்தவருக்கும் நம்பிக்கையினை ஊட்டுவோம் - விதைப்போம்.

இறைவன்தாமேஎமது நாட்டைஎல்லாவகையான தீமைகளிலிருந்தும் விடுவித்து ஆசீர்வதிப்பாராக!

ஒப்பங்கள்:-

(01) யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை.

(02) திருகோணமலை மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி கி. நோயல் இம்மனுவேல் ஆண்டகை.

(03) மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி இம்மனுவேல் பர்ணாண்டோ ஆண்டகை.

(04) மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி யோசவ் பொன்னையா ஆண்டகை.

### பேராயராகப் பதவியில் மல்கம் கருதினால் ரஞ்சித் ஆண்டகை இருக்கும்போதே வட,கிழக்கு ஆயர் மன்றம் உருவாக வேண்டும்

இலங்கை கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் பேராயராக மல்கம் கருதினால் ரஞ்சித் ஆண்டகை நியமிக்கப்பட்ட பின்னரே கொழும்பு உயர் மறைமாவட்டத்திற்குத் தமிழ்த்துணை ஆயர்கள் முதல் முறையாக நியமிக்கப்பட்டனர் என்பது சரித்திரமாகும்.

முதலில் தற்போதைய மன்னார் ஆயர் மேதகு கலாநிதி இம்மனுவேல் பர்ணாண்டோ ஆண்டகை கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் முதல் தமிழ்த் துணை ஆயராக 2011ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்டார். அவர் 2017இல் மன்னார் மறைமாவட்டத்தின் ஆயராக்கப்பட்ட பின்னர் றஞ்சித் பிள்ளைநாயகம் அடிகளார் கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் இரண்டாவது தமிழ்த் துணை ஆயராக 2020ஆம்ஆண்டில் நியமிக்கப்பட்டார்.

மிக நீண்ட காலமாகக் கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் அனுமதிக்கப்படாதிருந்த தமிழ்த் திருப்பலிகள் இலங்கை கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் பேராயராக மல்கம் கருதினால் ரஞ்சித் ஆண்டகை நியமிக்கப்பட்ட பின்னரே அனுமதிக்கப்பட்டது என்பது இங்கு சிறப்பு முக்கியத்துவத்துடன் நோக்கப்பட வேண்டும்.

கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் பேராயராக மல்கம் கருதினால் ரஞ்சித் ஆண்டகை பதவியில் இருக்கும் போதே வட கிழக்கின் நான்கு தமிழ் மறைமாவட்டங்களை இணைத்த தமிழ் ஆயர் மன்றம் உருவாக வேண்டும் என்பது பலரின் எதிர்பார்ப்பாகும். அவரின் பங்களிப்பு இதற்கு இங்கு பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவில் 14 உயர் மறைமாவட்டப் பேராயர்களைக் கொண்ட உயர் மறைமாவட்ட ஆயர் மன்றங்கள் உள்ளடங்கலாக 167 கத்தோலிக்க மறைமாவட்டங்களைக் கொண்ட இந்திய கத்தோலிக்க ஆயர் பேரவை உள்ளது.

தமிழ்நாட்டில் 03 உயர் மறை மாவட்டப் பேராயர்களைக் கொண்ட தமிழ் நாட்டுக் கத்தோலிக்க ஆயர் பேரவை உள்ளது

தமிழ்நாட்டில் மதுரை உயர் மறைமாவட்டம், சென்னை - மயிலாப்பூர் உயர் மறைமாவட்டம், பாண்டிச்சேரி - கடலூர் உயர் மறைமாவட்டம் என்ற 03 உயர் மறைமாவட்டப் பேராயர்களைக் கொண்ட ஆயர் மன்றங்கள் உள்ளடங்கலாக 18 கத்தோலிக்க மறைமாவட்டங்களைக் கொண்ட தமிழ் நாட்டுக் கத்தோலிக்க ஆயர் பேரவை உள்ளது.

இந்தியாவில் எந்த வித சிக்கலுமின்றிக் கத்தோலிக்க ஆயர் பேரவையும் பல ஆயர் மன்றங்களும் செயற்படும் வேளை இலங்கை நாட்டில் இது நிச்சயமாகச் செயற்படும் என்பதில் ஐயமில்லை.

காலைக்கதிர் Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ்



# இலங்கையின் குற்றவியல் நீதி அமைப்பு

> “குற்றங்கள் தண்டிக்கப்படுவதற்குக் குற்றவியல் நீதி ஏற்பாடுகள் சிறப்பாக அமைய வேண்டும். ஆனால், குற்றங்கள் நடைபெறாமல் இருப்பதற்கு மனித மன ஏற்பாடுகள் சிறந்ததாக அமைதல் வேண்டும்.”

பஸ்றி ஸீ.ஹனியா
LL.B (Jaffna)

நாட்டில் அதிகரிக்கும் விலைவாசி போல் குற்றங்களும் அதிகரித்துக்கொண்டுதான் செல்கின்றன. ஆகவேதான், நாம் செய்வது குற்றமா? இல்லையா? என்று அறிவதற்குக்கூட குற்றங்களின் அடிப்படை புரிதல்கள் அவசியமாகின்றன.

பிரிட்டிஷ் பேரரசின் காலணித்துவத்தின்படி, பிரிட்டிஷ் சட்டங்கள் படிப்படியாக நாடு முழுவதும் பயன்படுத்தப்பட்டன. எவ்வாறாயினும், தற்போதைய குற்றவியல் சட்டங்களின் திருப்தியற்ற நிலை காரணமாக நிச்சயமற்ற நிலைக்கு இட்டுச்சென்றது. இலங்கையின் தண்டனைச் சட்டம் முதலில் 1833 இல் இயற்றப்பட்டது. அந்தச் சட்டம் இந்தியச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டது என்று கூறப்படுகின்றது. இந்தத் தண்டனைச் சட்டம் தற்போது வரை பல திருத்தங்களுடன் உள்ளது.

குற்ற தண்டனைச் சட்டம் மற்றும் குற்ற தண்டனை நடைமுறை சட்டக்கோவை ஆகியவற்றில் குற்றம் மற்றும் அது தொடர்பான விளக்கங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

### குற்றங்களின் பரந்த பிரிவுகள்:-

* அரசுக்கு எதிரான குற்றங்கள்
* பொது அமைதிக்கு எதிரான குற்றங்கள்
* மனித உடலைப் பாதிக்கும் குற்றங்கள்
* சொத்துக்கு எதிரான குற்றங்கள்
* மதம் தொடர்பான குற்றங்கள்
* பாலியல் மற்றும் திருமண குற்றங்கள்
* நாணயங்கள் மற்றும் அரசு முத்திரைகள் தொடர்பான குற்றங்கள்

தண்டனைச் சட்டத்தின் கீழ் பரிந்துரைக்கப்பட்ட தண்டனைகள்:- மரணம், சிறைவாசம் (எளிய மற்றும் கடுமையான), சொத்து இழப்பு மற்றும் அபராதம்.

தண்டனைகள் குறிப்பிடப்பட்ட போதும் அதற்கு சில விதி விலக்குகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் கட்டுப்படுத்த முடியாத சந்தர்ப்பங்களாகக் கருதப்படுகின்றன. உதாரணம்:- பைத்தியம், போதை, தேவை, வற்புறுத்தல் மற்றும் தனியார் பாதுகாப்பு.




இவ்வாறாக குற்றப் பாதுகாப்புகள் பல வரையறைகளுக்கு உட்பட்டவையாகக் கருதப்படுகின்றன.

நீதிமன்ற அமைப்பைப் பொறுத்தவரை, குற்றவியல் நீதிமன்றங்களின் நடைமுறை மற்றும் செயற்பாடுகள் இன்று குற்றவியல் நடைமுறைச் சட்டம் மற்றும் நீதித்துறை சட்டத்தால் நிர்வகிக்கப்படுகின்றன.

நீதிவான் நீதிமன்றம் பெரும்பாலான குற்றங்களைக் கையாளும் குற்றவியல் நீதிமன்றமாகும். மேலும் முதல்நிலை நீதிமன்றம் சில சிறிய குற்ற வழக்குகளையும் கையாள்கின்றது.

சட்டத்தின்படி கொலை, கொலை முயற்சி மற்றும் கற்பழிப்பு போன்ற சில கடுமையான குற்றங்கள் மேல் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுகின்றன.

குற்றங்களுக்கு ஏற்பவும் பிரதேசங்களுக்கு ஏற்பவும் நீதிமன்ற இடங்களும் நீதிமன்றங்களும் மாறுகின்றன.

மேலும் அண்மைக்காலமாகக் காணப்படும் அசாதாரண சூழ்நிலையில் நீதிமன்றங்கள் தமது பணிகளைச் சிறப்பாகச் செய்ய முடியாத நிலைகளுக்கு உட்பட்டு இருக்கின்றன.

நீதிமன்றங்களின் தாமதம் என்ற விடயம் எப்போதுமே பேசுபொருள்தான். இற்றைக்கு காணப்படும் அவசர சூழ்நிலையானது மேலும் அதனைச் சூடுபிடிக்க வைத்துவிட்டது. நீதி வழங்குவதானது இலகுவான விடயம் கிடையாது. அது ஒருவரின் வாழ்க்கையையே மாற்றும் ஒரு விடயமாகும். மேலும், இலங்கையின் நீதி அமைப்பின் குறைபாடுகளும் இதற்கு ஒரு காரணமாக அமைகின்றது.

இலங்கையில் பொதுவாக ‘நீதிமன்ற தாமதங்கள்’ என்று அழைக்கப்படும் குற்றவாளிகளை விசாரணைக்குக் கொண்டு வருவதில் ஏற்படும் தாமதங்களே பெரும்பாலும் விளக்கமறியல் கைதிகளின் கூட்டத்துக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

அதாவது அதிகரித்துக் கொண்டிருக்கும் குற்றங்களின் தொகை தற்போது நடைமுறையில் இருக்கும் நீதிமன்றங்கள் மற்றும் நீதிபதிகளின் தொகையை விட மிக அதிகமாகக் காணப்படுவதாகும்.



### சிறார் குற்றங்கள் மற்றும் சிறார்களின் பாதுகாப்புக்கான வசதிகள்

பொதுவாக, குற்றவாளிகள் என்றால் பருவமடைந்த மட்டங்களில் சிந்திக்கின்றோம். இருந்தபோதிலும் சிறுவர் குற்ற நடவடிக்கைகளும் அதற்கான தண்டனை மற்றும் ஏற்பாடுகளும் நடந்துகொண்டுதான் இருக்கின்றன.

குற்றவாளிகள் மற்றும் குற்றத்துக்கு முந்தைய சிறார்களின் பாதுகாப்பு மற்றும் மறுவாழ்வுக்காகப் பல்வேறு வசதிகள் உள்ளன. அதைப் பின்வருமாறு சுருக்கலாம்.



குற்றவாளிகள் மற்றும் குற்றவாளியை மறுவாழ்வு செய்வதற்கு வசதியாக, வீட்டுச் சூழ்நிலைகள் ஒழுங்கமைக்கப்படாத நிலையில், இந்தக் குற்றவாளி சிறார்களுக்குத் தேவையான கவனிப்பும் பாதுகாப்பும் வழங்கப்படும் இடமாக தனியார் குடியிருப்புகளை அங்கீகரிக்க சட்ட ஏற்பாடு உள்ளது.

இப்போது இலங்கையில் 200 இற்கும் மேற்பட்ட தன்னார்வ இல்லங்கள் உள்ளன மற்றும் அவர்களின் சேவைகளுக்காக அரசு மாதந்தோறும் ‘தனிநபர் மானியம்’ செலுத்துகின்றது.

அநாதைகள், ஆதரவற்றோர் அல்லது கைவிடப்பட்ட குழந்தைகளுக்கான பகல் நேர பராமரிப்பு மையங்களும், நன்னடத்தை மற்றும் குழந்தை பராமரிப்பு சேவைகள் துறையால் வழங்கப்பட்ட உதவியுடன் உள்ளன.

அரசு மற்றும் பிற தன்னார்வ அமைப்புகளால் நடத்தப்படும் நிறுவனங்கள் உள்ளன. அவை குறிப்பாக ‘பாதுகாப்பு சேவை’ என்ற பிரிவில் வரும் சிறார்களுக்குப் பாதுகாப்பு அளிக்கின்றன. நாடு முழுவதும் அரசு மற்றும் தன்னார்வ நிறுவனங்கள் உள்ளன.

ஆகவேதான் இலங்கையின் குற்றவியல் அடிப்படை அமைப்பு என்பது நாளுக்கு நாள் விரிவடைந்து கொண்டு செல்கின்ற போதிலும் விரிவடைந்து செல்கின்றது என்பது சந்தோசத்தை அளித்தாலும் அவ்வாறு செல்வதற்கான காரணம் குற்றங்கள் அதிகரிப்பதே எனும் போது கவலை அளிக்கின்றது.

எனவேதான் குற்றங்கள் தண்டிக்கப்படுவதற்குக் குற்றவியல் நீதி ஏற்பாடுகள் சிறப்பாக அமைய வேண்டும். ஆனால், குற்றங்கள் நடைபெறாமல் இருப்பதற்கு மனித மன ஏற்பாடுகள் சிறந்ததாக அமைதல் வேண்டும்.

# கிருபா லேணர்ஸ்

කිරුබා ලර්නර්ස් KIRUBAA LEARNERS

அரச அங்கிகாரம் பெற்ற வட மாகாணத்தின் முதல் தர கனரக வாகன பயிற்சிப் பாடசாலை.



அ.கிருபாகரன்
-அதிபர்-

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
- மும்மொழியிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறைக் கட்டணங்கள்.
- இரவிலும் வாகன பயிற்சிகள்.




**தலைமையகம்**
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 4353 / 0777 22 5292
kirubalearners@gmail.com
www.kirubalearners.com

| | | | |
|---|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 | ஆவரங்கால் 021 222 6688 |
| சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 | பூநகரி 021 320 1818 | முழங்காவில் 021 300 6544 |
| விஸ்வமடு 021 320 1515 | மன்னார் 023 225 1656 | கிளிநொச்சி 021 228 5505 | வவுனியா 024 222 7777 |





இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.09.2021 இல் வெளியிடப்பெற்றது.

# கொரோனா காவுகொண்ட 52 பேரின் சடலங்கள் வடக்கு மாகாண வைத்தியசாலைகளில் தேக்கம்

## எரியூட்ட அனுராதபுரம் அனுப்புவதற்கு நடவடிக்கை

**(ந.லோகதயாளன்)**

**வடக்கு மாகாண வைத்தியசாலைகளின் பிரேத அறைகளில் தேக்கத்திலுள்ள 52 கொரோனா உடலங்களை எரியூட்டுவதற்கு அனுராதபுரத்துக்கு அனுப்புவதற்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏற்பாடு செய்துள்ளார்.**

**வடக்கு மாகாணத்திலுள்ள வைத்தியசாலைகளில் கொரோனா காரணமாக மரணித்தவர்களின் 52 உடலங்கள் சேர்ந்துள்ளதால் சவச்சாலை நெருக்கடியைச் சமாளிக்க அவற்றை வடமேல் மாகாணத்தில் எரியூட்ட வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.**

**வடக்கு மாகாணம் முழுவதற்கும் தற்போது மின் மற்றும் எரிவாயு உடல் தகனம் செய்யக்கூடிய வசதிகள் யாழ்ப்பாணம் கோம்பயன்மணல் மயானம் மற்றும் வவுனியா - பூந்தோட்டம் ஆகிய இரண்டு இடங்களில் மாத்திரமே காணப்படுகின்றன.**

**கோம்பயன்மணலில் நாள் ஒன்றுக்கு 4 அல்லது 5 உடலங்களையே எரியூட்டக்கூடியதாக இருக்கின்றது. இதே நிலைமையே பூந்தோட்டம் தகனச்சாலையிலும் காணப்படுகின்றது.**

ஆனால், தற்போது வடக்கு மாகாணம் முழுவதும் 52 கொரோனா உடலங்கள் சேர்ந்துவிட்டதால் அவற்றை வடமேல் மாகாணத்திலுள்ள அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவையிலுள்ள தகன சாலைகளில் எரியூட்டுவதற்கு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பா ளர் ஆ.கேதீஸ்வரன் ஏற்பாடு செய்துள்ளார்.

கொரோனா காரணமாக உயிரிழந்தவர்களில் யாழ்.போதனா வைத்தியசாலை யில் 20 உடலங்கள் காணப்படுவதுடன், யாழ்.மாவட்டத்தின் ஏனைய வைத்தியசாலைகளையும் சேர்த்து 31 உடலங்கள் உள்ள அதேநேரம் கிளிநொச்சியில் 9 உடலங்களும், முல்லைத்தீவு, மன்னார், வவுனியாவில் 12 உடல்களுமாக மொத்தம் 52 உடலங்கள் எரியூட்ட வேண்டிய அவசர நிலைமையில் காணப் படுகின்றன.

இதற்கமைய இன்று ஞாயிற்றுக்கிழமை முதல் கட்டமாக 10 உடலங்கள் எடுத்துச் செல்லப்படவுள்ளன. இவற்றில் 5 உடலங்கள் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவை. கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த உடலங்களைப் பொலன்னறுவை ஹிங்குராகொடவிலுள்ள தகனசாலையில் எரியூட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## வவுனியாவில் நேற்று 116 பேருக்குத் தொற்று

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் மேலும் 116 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளின் முடிவுகள் சில நேற்றிரவு வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கொரோனாத் தொற்று பரவல் அடைந்துள்ள நிலையில் 116 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றாளர்களைக் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

### 3, 333 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்பிரகாரம் நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 59 ஆயிரத்து 459 ஆக அதிகரித்துள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 ஆயிரத்து 310 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 82 ஆயிரத்து 476 ஆக உயர்வடைந்துள்ளது.

### வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மரணமடைந்துள்ளனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் கொரோனாத் தொற்று தீவிரம் அடைந்துள்ள நிலையில் பலரும் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுவருகின்றனர். இந்நிலையில், கொரோனாத் தொற்று காரணமாக தடுப்பூசி எதனையும் பெற்றுக்கொள்ளாத 32 வயது இளைஞர் உட்பட நான்கு பேர் மரணமடைந்துள்ளனர்.

32 வயது இளைஞர் தவிர்ந்த ஏனைய மூவரும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். குறித்த நான்கு பேரினதும் சடலங்களையும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தகனம் செய்வதற்குச் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

### 145 பேர் மரணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

77 ஆண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதில் ஆண்கள் மூவரும், பெண் ஒருவரும் என 04 பேர் 30 வயதுக்குட்பட்டவர்களாவர். 19 ஆண்கள், 05 பெண்கள் என 24 பேர் 30 - 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 117 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 55 ஆண்களும், 62 பெண்களும் அடங்குகின்றனர்.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 9 ஆயிரத்து 951 ஆக அதிகரித்துள்ளது.

### இந்திய மீனவர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எனத் தமிழக மீனவர் கள் தெரிவிக்கின்றனர்.

இந்தியாவின் கோடியாகரையில் இருந்து நேற்று மீன்பிடிக்க கடலிற்குச் சென்ற மீனவர்கள் மீது கோடியாக்கரையில் இருந்து 11 கடல் மைலுக்கும் 12 கடல் மைலுக்கும் இடைப்பட்ட தூரத்தில், யாழ்ப்பாணம் வடமராட்சித் திசையில் இருந்து 5 மீன்பிடிப் படகுகளில் வந்த 15 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் 3 இந்தியப் படகுகள் மீது தாக்குதல் நடாத்தியுள்ளனர். இதன்போது இந்திய மீனவர்கள் சிலர் காயமடைந்துள்ளனர். தாக்குதல் நடத்திய குழுவினர் இந்திய மீன்பிடி படகுகளில் இருந்த பொருள்களைக் கொள்ளையடித்துச் சென்றனர் எனவும் தெரிவிக்கின் றனர்.

இந்த தாக்குதலின்போது இந்தியப் படகில் இருந்த - இந்திய நாணயத்தில் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான மீன்கள், மின்னியல் பொருள்கள், சிலிண்டர்கள் மற்றும் ஜீ.பி.எஸ்கள் உள்ளிட்ட கருவிகள் கொள்ளையிடப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது காயமடைந்த 6 இந்திய மீனவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவத்தினால் கோடியாக்கரையில் பதற்றம் நிலவுகின்றது.

## அச்சுவேலியில் மின்னல் தாக்கி உயிரிழந்தவரின் இறுதி ஊர்வலத்தில் பெருமளவானோர் பங்கேற்பு



**(ந.லோகதயாளன்)**

அச்சுவேலியில் மின்னல் தாக்கி உயிரிழந்தவரின் இறுதிச் சடங்கில் பெருமளவான மக்கள் கலந்துகொண்டனர்.

அச்சுவேலி, நாவற்காடுப் பகுதியில் கடந்த 02 ஆம் திகதி மின்னல் தாக்கத்துக்கு உள்ளாகியதில் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் சாரதியான அப்பகுதியைச் சேர்ந்த தியாகராசா மதனபாதம் (வயது 40) என்பவர் உயிரிழந்திருந்தார்.

நேற்று அச்சுவேலி முழங்கன் இந்து மயானத்தில் சடலம் தகனம் செய்யப்பட்டது.

இதன்போது, அவரது நண்பர்கள், உறவினர்கள் எனப் பலரும் கூடி அஞ்சலி செலுத்தி மயானம் வரை அவரது உடலுடன் ஊர்வலமாகச் சென்று சடலத்தைத் தகனம் செய்தனர்.

அதேவேளை, அவரது இறுதி ஊர்வலத்தில் அவர் செலுத்திய பஸ்ஸையும் அவரது நண்பர்கள் செலுத்தி வந்தனர்.

## வேலுகுமார் எம்.பிக்கு எதிராக ஜனாதிபதியிடம் முறைப்பாடு

### இ.தொ.கா. அறிவிப்பு

ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.வேலுகுமார் வெளியிட்டுள்ள கருத்து தொடர்பில் ஜனாதிபதியிடம் முறையிடப்படும் என்று இலங்கை தொழிலாளர் காங்கி ரஸின் உப செயலாளர் சச்சிதாநந்தன் தெரிவித்தார்.

கொட்டகலையில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பி னர் வேலுகுமார், அரசு, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்'டன் இணைந்து தோட்டக் காணிகளைத் தனியாருக்கு விற்றுள்ளார் என்று குறிப்பிட்டு சில தோட்டங்களைக் கூறினார்.

இது ஒரு பாரிய பிரச்சினை. அவருக்கு அரசியல் செய்ய முடியாத நிலையை மறைப்பதற்காக அதனை வேறு விதமாக வெளிப்படுத்துகின்றார். மக்களுக்கும் சேவை செய்யவில்லை. மக்களிடத்திலும் செல்ல முடியாது. இ.தொ.காவை விமர்சித்தால்தான் அரசியல் செய்ய முடியும் என்ற நிலைக்கு வந்துள்ளார்.

இது தொடர்பாக நாங்கள் ஜனாதிபதியிடம் முறையிடவுள்ளோம். எந்தவொரு அடிப்படைத் தன்மையும் இல்லாமல் இவ்வாறான குற்றச்சாட்டை முன்வைப்பது அநாகரிகமான செயல் - என்றார்.

## கொரோனா தொற்றாளர் தற்கொலை

கொரோனா வைரஸ் தொற்றிய நிலையில் சிகிச்சை பெற்று வந்த நபர் ஒருவர், தற்கொலை செய்துகொண்டுள்ள சம்பவம் கண்டியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

38 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையே, கண்டி வைத்தியசாலையின் 5ஆவது மாடியில் இருந்து குதித்து இவ்வாறு தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸ் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.